நாவாந்துறைப் படிப்பகம்


# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 02 வெள்ளிக்கிழமை (18-08-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:196


## தேர்தலை நீதியாக நடத்தக் கோரி பொரளையில் நேற்று ஆர்ப்பாட்டம்

### பெரும் எண்ணிக்கையில் பிக்குகள் பங்குபற்றினர்

கொழும்பு,ஓக.18

தேர்தலை நீதியாக நடத்துமாறு கோரியும், அரசமைப்புச் சீர்திருத்த சட்டநகலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும்' நேற்றுப் பிற்பகல் பொரளை சந்தியில் பெரும் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐ.தே.க., மக்கள் ஐக்கிய முன்னணி, சிங்கள உறுமய, சிங்கள வீர விதான, பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய அமைப்பு ஆகியவற்றின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

பௌத்த பிக்குகள் உட்பட இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இதில் கலந்துகொண்டு அரசுக்கு எதிராகக் குரலெழுப்பினர்.

தாய்நாட்டைப் பாதுகாக்கும் அமைப்பின் ஏற்பாட்டில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் அரசின் செயற்பாடுகளைக் கண்டித்துப் பல பிக்குகளும் உரை நிகழ்த்தினர்.

மாலை 5.45 மணிக்கு முடிவடைந்த ஆர்ப்பாட்டத்தை அடுத்து அங்கு சத்தியாக்கிரகமும் இடம் பெற்றது. (இ-3-4)

## ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பை ஒற்றுமைப்படுத்த முயற்சி

### பெருமாளுடன் அஷ்ரப் நேற்று பேச்சு

கொழும்பு,ஓக19

ஈ.பி.ஆர்.எல்.எவ்.அமைப்பில் ஏற்பட்டுள்ள பிளவை சீராக்க அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான எம்.எச்.எம்.அஷ்ரப் முயற்சி மேற்கொண்டுள்ளார்.

அந்த அமைப்பின் ஒரு பிரிவின் பொறுப்பாளராக விருக்கும் வடக்கு-கிழக்கு மாகாணசபையின் முன்னால் முதல்வர் அ.வரதராஜப்பெருமாளுடன் அஷ்ரப் நேற்றுப் பேச்சு நடத்தினார்.

இரு தரப்பையும் ஒற்றுமையாக ஓர் அணியில் செயற்பட வைக்கும் முயற்சி மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் சொன்னார். (இ-3-6)

# அரசு - புலிகள் இணக்க நிலைக்கு நோர்வே தொடர்ந்து முயற்சிக்கும்

## ஹமீத் நினைவுக் கூட்டத்தில் முன்னாள் பிரதமர் தகவல்

கொழும்பு,ஓகஸ்ட்18

**இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் பொருட்டு அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இணக்க நிலை ஒன்றை எட்டுவதற்கு நோர்வே அரசாங்கம் தொடர்ந்து - கடைசிவரை - முயற்சி செய்யும்.**

**இவ்வாறு கொழும்பு வந்துள்ள நோர்வே நாட்டின் முன்னாள் பிரதமரும், நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கலாநிதி ஜெல் மக்னே பொன்டேவிக் தெரிவித்தார்.**

ஏ.சி.எஸ். ஹமீத் ஞாபகார்த்த நிலையம் ஒழுங்கு செய்த ஹமீத் நினைவுரையை, நோர்வே முன்னாள் பிரதமர் பொன்டேவிக் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று மாலை ஆற்றினார்.

அங்கு அவர் உரை நிகழ்த்தும் போது கூறியதாவது:-

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.18

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தின் முதலாம் ஆண்டு மாணவனான இ.ஷாஜகான் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணை இன்று ஆரம்பமாகவிருப்பதாகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

"இந்த விவகாரம் விஞ்ஞான பீடத்துடன் சம்பந்தப்பட்டுள்ளது. விஞ்ஞான பீடாதிபதி கொழும்பில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் கைது

கொழும்பு,ஓக.18

இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டுக்குள் சட்டவிரோதமாக நுழைவதற்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் உட்பட மூவர் தமிழ்நாடு பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த றொபின்சன் மற்றும் சிவபாலசிங்கம் ஆகியோரும் மன்னாரைச் சேர்ந்த சசிக்குமார் அல்லது ஜோன்ஸன் என்பவருமே கைதானவர்களாவர்.

17இலங்கைத் தமிழர்கள் அடங்கிய ஐந்து குடும்பங்களைத் தமிழ்நாட்டுக்குள் சட்டவிரோதமாக அழைத்து வந்ததாக இந்த மூவர் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (இ-6)

## புதிய அரசமைப்பை கடுமையாக எதிர்க்கும் சோபித தேரருக்கு கொலைப் பயமுறுத்தல்



கொழும்பு,ஓக.18

அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டநகலைக் கடுமையாக எதிர்த்து வந்த தலைவர்களில் ஒருவரான தேசிய சங்க சபாவின் பிரமுகர் மாதுறுவாவே சோபித தேரருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரத்தில் தினமும் தொலைபேசி மூலமும், கடிதம் மூலமும் தமக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் -

தமக்கு மட்டுமல்லாது தமது சபையின் ஏனைய பிரமுகர்களான முத்தெட்டுவே ஆனந்த தேரருக்கும் மற்றும் பல முன்னணிப் பிக்குகளுக்கும் இத்தகைய மிரட்டல்கள் விடுக்கப்பட்டதாகவும் - சோபித தேரர் தெரிவித்தார். (இ-3-20)

## இலியாஸ் உட்பட 2எம்.பிக்களை முஸ்லிம் காங்கிரஸ் இடைநிறுத்தியது

கொழும்பு,ஓக.18

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஐ.என்.இலியாஸ், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எவ்.எஸ்.எம் அபூபக்கர் ஆகியோர் கட்சியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

கட்சியின் தலைவரும், அமைச்சருமான எம்.எச்.எம்.அஷ்ரப் இது விடயமாக அவர்களுக்கு நேற்று கடிதங்களை அனுப்பியுள்ளார்.

கட்சியின் சட்ட விதிகளுக்கு விரோதமாக நடந்தமைக்காக இடைநிறுத்தம் செய்வதாக அவர்க

(12ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக் கட்சியின் செயலாளர் பதவி:

## கடும் போட்டியின் பின் திஸநாயக்க தெரிவானார்!



கொழும்பு,ஓக.18

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளராக இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க கடும் போட்டிக்கு மத்தியில் நான்கு மேலதிக வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் அலரிமாளிகையில் கூடிய கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திலேயே இவர் தெரிவானார்.

செயலாளர் பதவிக்கு எஸ்.பி. திஸநாயக்கவும், மைத்திரிபால சிறிசேனவும் போட்டியிட்டனர். எஸ்.பி.திஸநாயக்கவுக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## செயலமர்வு மத்திய கல்லூரியில்

யாழ்ப்பாணம்,ஓக.19

யாழ்.செயலகத்தில் இன்றும், நாளையும் ஏற்பாடாகியிருந்த மக்கள் குறைகேள் செயலமர்வு திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் செயலமர்வு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறுமென நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இடமாற்றம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## மேலும் 2 எலும்புக்கூடுகள் கிளிநொச்சியில் மீட்பு!

வவுனியா,ஓக.18

கிளிநொச்சிப் பகுதியில் மேலும் இரு எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. நேற்றும் நேற்று முன்தினமும் அப்பகுதி மக்களினால் இவை வெவ்வேறு இடங்களில் இருந்து மீட்கப்பட்டன.

1996ஆம் 98ஆம் ஆண்டு முற்பகுதியில் காணாமற்போன 184 தமிழர்களில் இருவரின் எலும்புக்கூடுகளாக இவை இருக்கலாம் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன.

கிளிநொச்சியில் சேவியர்கடைச் சந்திக்கு சமீபமாக உள்ள ஆற்றுப்படுக்கைப் பகுதியில் இருந்து, நேற்று முன்தினம் ஓர் எலும்புக்கூடும் உதயநகர்ப் பகுதியில் காணி ஒன்றைத் துப்புரவு செய்த போது

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ரத்னசிறி ரணிலுடன் பேச்சு!

கொழும்பு,ஓக.18

புதிய தேர்தல் முறையை உள்ளடக்கிய அரசமைப்பின் 17 ஆவது சட்டத் திருத்தத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவைப் பெறும் நோக்கத்துடன் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுடன் நேற்று முன்தினம் பேச்சு நடத்தினார்.

நாடாளுமன்றத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

நாடாளுமன்றத்தைக் கலைப்ப

(12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் கண்ணிவெடி விழிப்பு வாரம்

வவுனியா,ஓக.18

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடு அற்ற பகுதியில் இன்று முதல் ஒரு வாரம் கண்ணிவெடி விழிப்பு வாரம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள இந்த வாரம் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது.

கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி தேவையற்ற உயிரிழப்புகளில் இருந்து அவர்களைப் பாதுகாக்கவும் இந்த வாரம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. (இ-3-4)

## அநுராதபுரம் சிறையிலிருந்து 19 பேர் யாழ்ப்பாணத்துக்கு!

வவுனியா,ஓக.18

குடாநாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதுசெய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 19பேர் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படவிருக்கின்றனர்.

இன்று திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கி

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் மக்கள் வங்கி நடமாடும் கருமபீடம்

யாழ்ப்பாணம்,ஓக.18

40 ஆவது ஆண்டு நிறைவினை ஒட்டி மக்கள் வங்கி பல புதிய திட்டங்களை வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் ஓர் அங்கமாக யாழ்நகரில் பஸ் தரிப்பு நிலையப் பகுதியில் வாடிக்கையாளரின் நன்மை கருதி நடமாடும் வங்கிச் சேவை கருமபீடம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இவ்வாறான நடமாடும் சேவைகள் சுன்னாகம் மற்றும் பருத்தித்துறைப் பகுதிகளிலும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பல நன்மைகளை வழங்கும்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

வீடத்தற்பளை புதுக்குளத்து

# அருள்மிகு கண்ணகை அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேக அறிவித்தல்

மேற்படி ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா, நிகழும் விக்கிரம வருடம் ஆவணி மாதம் 4ஆம் நாள் (20-08-2000) ஞாயிற்றுக்கிழமை 11.45 முதல் 12.45 மணிவரையுள்ள அச்சுவினி நட்சத்திரமும் பஞ்சமித் திதியும் அமிர்த சித்தயோகமும் விருச்சிக இலக்கினமும் கூடியுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறவுள்ளதால் இம்மஹாகும்பாபிஷேகப் பெருவிழாவைக் கண்டு தரிசித்து அம்பாளின் திருவருளைப் பெற்று உய்யுமாறு அம்பாள் அடியார்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

*இங்ஙனம்*
**ஆலய தர்மகர்த்தா.**

(77412)

---

**கலாஜோதி இளைஞர் ஒன்றியம்**, தட்டாதெரு
நல்லூர்க் கந்தன் வருடாந்த மஹோற்சவ

## சமய அறிவுப்போட்டி - 2000

*அனைத்து வயதினரும் பங்குபற்றலாம்*

★ முதலாம் பரிசு - தங்கப் பதக்கம்
★ இரண்டாம் பரிசு - வெள்ளிப் பதக்கமும், 2000 ரூபாவும்
★ மூன்றாம் பரிசு - வெண்கலப் பதக்கமும், 1000 ரூபாவும்
மற்றும் பல ஆறுதல் பரிசில்களும்
*பரிசளிப்பு பெரியோர்கள் முன்னிலையில் இடம்பெறும்*

**முடிவு திகதி:- 25-08-2000**

*படிவம் பெறும் இடம்:*
1) நிலையத் தண்ணீர்ப் பந்தல்
2) மண்டேலா புத்தக நிலையம் *யாழ். பஸ் நிலையம் அருகில்*
3) சரஸ்வதி புத்தகசாலை *நல்லூர் கோயில் முன்பாக*

**பூ.மயூரன்**
**இந்து மாமன்றப் பொறுப்பாளர்.**

*விளம்பர அன்பளிப்பு:*
**அற்புதா றேடிங் கொம்பனி**
*198, ஆஸ்பத்திரி வீதி, (பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.*

(77415)

---

## 52ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 26 - 10 - 1945

மறைவு 28 - 06 - 2000

### பொன்னுத்துரை கனகசபாபதி
(கனகராசா)

எமது குடும்பத் தலைவரின் மறைவு கேட்டு உடன் விரைந்து உதவியவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் நேரிலும், கடிதங்கள் மூலமும், தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு,

இன்று (18-08-2000) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் அதைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்.**

*கற்பகபிள்ளையார் வீதி,*
*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*

(77350)

---

## மரண அறிவித்தல்

### கனகசபை சிதம்பரநாதன்

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய கனகசபை சிதம்பரநாதன் நேற்று (17-08-2000) வியாழக்கிழமை ஜேர்மனியில் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் இந்திராணியின் (சின்னக்கிளி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கனகசபை - தங்கமலர் தம்பதிகளின் அன்பு மகனும், கிருஸ்ணராசா (பிள்ளையார்) - பூபதி தம்பதிகளின் மருமகனும், திபானி (கனடா), பிரதீபன் (A/L 99 மாணவன், கணித பிரிவு), ரஜனி (A/L 2001 வர்த்தகப்பிரிவு, வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், சூரியகுமாரி, பத்மகுமாரி, சந்திரகுமாரி, சோதிநாதன், சசிகுமாரி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

*கற்பகப்பிள்ளையார் வீதி,*
*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*

(77430)

---

### அறிவித்தல்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**

***பௌதிக விஞ்ஞான வெற்றிடம் நிரப்பு பட்டியல் 1999/2000***

மேற்படி கற்கைநெறிக்கு யாழ். பல்கலைக்கழகம் வவுனியா வளாகத்திற்கும் ராஜரட்டை பல்கலைக்கழகத்துக்கும் பிரயோக விஞ்ஞான கற்கைநெறிக்கு ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களில் இருந்து தற்பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு வெற்றிடம் நிரப்பும் பட்டியல் மூலம் தெரிவானோர் விவரம் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி காரியாலய விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளது.

தெரிவான மாணவர்கள் தங்கள் பதிவினை 25.08.2000க்கு முன்னர் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

***பதிவாளர்***
17.08.2000

(C/12544)

---

## ராஜா
(யாழ்ப்பாணம்)
அர்ஜுன், ரேவதி, வடிவேல், மணிவண்ணன் மற்றும் பலர் நடிப்பில்

## சுயாஸ்
காட்சிகள்: 10-30, 2-00
(புதிய நேரம்)
25.08.2000 முதல்

## பூவேலி

(C/12325)

---

## நாகம்ஸ்
சுன்னாகம்.
ரஜனி, சௌந்தர்யாவின்

## படையப்பா
(ரீல்ஸ்)
காட்சிகள்:
11.00, 2.30 (புதிய நேரம்)
21 முதல்

## அமர்க்களம்

(77425)

---

# வீடியோ நாடா தபாலகத்தில் ஏற்பு

யாழ்ப்பாணம், ஓக.18

யாழ்.குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்கு அனுப்புவதற்கான வீடியோ நாடாக்கள் யாழ். பிரதம தபாலகத்தினால் மீண்டும் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

பொதுமக்கள் இன்று வெள்ளிக் கிழமை தொடக்கம் காலை 9 மணியிலிருந்து நண்பகல் 12 மணி வரை இந்த நாடாக்களை யாழ். பிரதம தபாலகத்தில் ஒப்படைக்க முடியும் என பிரதம தபாலதிபர் தெரிவித்துள்ளார்.

(க)

---

*மறுபடி*

**கணக்கீடு**
**திரு. பாலவாசன்**
**B.B.A. (F.M. Sp. 1)**

A/L 2002
**செம்மையாக்கல்**
Sat., Sun. - 10 - 11 a.m.

**விக்னா கல்வி நிறுவனம்**

(77403)

---

**நியூட்டன்**
ஸ்ரான்லி வீதி,
*(ஆரியகுளம் சந்தி)*
**கணக்காய்வுப் பரீட்சை வழிகாட்டி வகுப்புகள்**
**திரு. சுதர்ஷன்**
★ கணக்கீடு
★ ஆகுசெலவு கணக்கீடு
★ கணக்காய்வு

ஆரம்பம்:-
**19-08-2000 (நாளை)**
*சனி 2மணி (ப.நே.)*

(77397)

---

## ஈசன் கல்வி நிலையம்
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.

## A/L 2000

**பொதுச் சாதாரண பரீட்சை**
விசேட வகுப்புகள்

திரு. த.தவசேகர் (B.Sc.)
சனி(19), திங்கள்(21), செவ்(22)
காலை 7.00 - 9.30 a.m (S.L.T)

★ *சகலதுறை மாணவர்களும் கலந்து கொள்ளலாம். அச்சடித்த பாடக்குறிப்புகளும் வழங்கப்படும்.*

(77416)

---

## சித்த மருத்துவ மாணவர் மன்றம், யாழ். பல்கலைக்கழகம்.

### உங்களிடம் வருகின்றோம்

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை கைதடியிலிருந்து இடம்பெயர்ந்து மருத்துவபீடத்தில் தற்காலிகமாக இயங்கிவருகின்றது. கைதடியில் சகல வளங்களுடனும் விளங்கிய எமது துறை நூலகம் உட்பட எல்லாவற்றையும் இழந்த நிலையிலேயே இப்போது உள்ளது. பெறுமதிவாய்ந்த அரிய தமிழ், ஆங்கில நூல்கள், ஏட்டுச் சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள் இழக்கப்பட்டுள்ளன. இந்த இழப்பானது எமது மாணவர்களின் மருத்துவக் கல்வியில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. அதனை ஈடுசெய்யும் வகையில் இன்று (18-08-2000) முதல் இல்லங்கள் தோறும் உங்களைத் தேடி வருகின்றோம்.

சித்த மருத்துவம், ஆங்கில மருத்துவம் சார்ந்த தமிழ், ஆங்கில நூல்களை வைத்திருப்பவர்கள் அவற்றை எமக்குத் தந்துதவுமாறும், நிதி நல்க விரும்புவோர் தங்களால் இயன்றதை வழங்கியுதவுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

**- சித்த மருத்துவ மாணவர்கள்**

(77428)

---

## வட இலங்கை சங்கீத சபை

# அறிமுறைப் பரீட்சை – 2000 நேர அட்டவணை

| | | |
|---|---|---|
| 02-09-2000<br>சனிக்கிழமை | காலை | சங்கீதம் தரம் - 2, 4, 5 ,6 பகுதி - I<br>பரதம் தரம் - 3<br>மிருதங்கம் தரம் - 6 பகுதி - I |
| | மாலை | சங்கீதம் தரம் - 6 பகுதி II<br>மிருதங்கம் தரம் - 2, 3, 4, 5, 6 பகுதி II |
| 03-09-2000<br>ஞாயிற்றுக்கிழமை | காலை | சங்கீதம் தரம் - 3<br>பரதம் தரம் - 2, 4, 5, 6 பகுதி I<br>நாடகம் தரம் - 2, 3, 4, 5, 6 பகுதி I<br>பண்ணிசை - தரம் 6 பகுதி I |
| | மாலை | பரதம் தரம் - 6 பகுதி II<br>நாடகம் தரம் - 6 பகுதி II<br>பண்ணிசை தரம் - 2, 3, 4, 5, 6 பகுதி II |

*குறிப்பு:-*
சாவகச்சேரி யா/றிபேக் கல்லூரியைப் பரீட்சை நிலையமாகத் தெரிவுசெய்த தேர்வு நாடிகள், யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் - மண்டபம் III (மூன்று) அல்லது யா/இராமநாதன் கல்லூரி மண்டபம் III இல் தோற்றலாம் என்பதை அறியத் தருகிறேன்.

**தலைவர்,**
**வட இலங்கை சங்கீத சபை.**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
*(வலயக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்)*

(C/12541)

சென்னை விமானத்துடன் பறவை மோதியது:

# விமானிகளின் சாதுரியத்தால் விபத்து தவிர்க்கப்பட்டது!

## 55 பயணிகள் உயிர் தப்பினர்

சென்னை,ஓகஸ்ட்.18,

**சென்னையிலிருந்து பெங்களூர்சென்ற லயன்ஸ் எயர் நிறுவன விமானத்தின் மீது பறவை மோதியதால் ஏற்பட இருந்த மோசமான விபத்து விமானிகளின் சமயோசித நடவடிக்கையால் தவிர்க்கப்பட்டது. இதனால் விமானத்தில் இருந்த 55 பயணிகள் உயிர்தப்பினர். சென்னை விமான நிலையத்தில் இருந்து கிளம்பிய சிறிது நேரத்தில் பறவை ஒன்று விமான இயந்திரத்தில் மோதிச் சிக்கிக்கொண்டது. இதனால் இயந்திரம் இயங்க முடியாத நிலை ஏற்பட்ட போதும் விமானிகள் சாதுரியமாக விமானத்தை மீண்டும் சென்னை விமான நிலையத்தில் பத்திரமாக தரையிறக்கி விபத்தைத் தவிர்த்தனர். (ஐ-ஒ)**

# பாகிஸ்தானின் 'கார்கில்' தோல்விக்கு முஷாரபின் திறமையின்மை காரணம்

## குல்சும் நவாஸ் குற்றச்சாட்டு

இந்தியாவுடனான கார்கில் யுத்தத்தில் பாகிஸ்தான் படுதோல்வியடைந்ததற்கு இராணுவ ஆட்சியாளர் பர்வேஷ் முஷாரபின் திறமையின்மையே காரணம் என்று முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீபின் மனைவி குல்சும் நவாஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கார்கில் யுத்தத் தோல்வி குறித்து விசாரணை நடத்திய குழுவின் அறிக்கையை வெளியிட வேண்டும் என்று வலியுறுத்திய குல்சும் அந்த அறிக்கையில் பாகிஸ்தான் இராணுவம் கார்கிலில் அடைந்த பின்னடைவுக்கு முஷாரப் காரணம் என்று தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும்-

அதனாலேயே இராணுவ ஆட்சியாளர்கள் விசாரணை அறிக்கையை வெளியிடுவதைத் தாமதப் படுத்துவதாகவும் கூறினார்.

நவாஸ் ஷெரீப் சிறையில் உள்ளதால் அவரது கட்சிக்குத் தலைமை வகித்து இராணுவ அரசுக்கு எதிராக குல்சும் நவாஸ் போராடி வருகிறார். தனது போராட்டத்துக்கு வலு சேர்க்க பாகிஸ்தானியர்களிடம் உள்ள இந்திய எதிர்ப்பு உணர்



வைத் தூண்டிவிட்டு கார்கில் யுத்தத் தோல்விக்கு காரணமானவர் என்று முஷாரபை அடையாளம் காட்ட குல்சும் முயற்சிப்பதாகக் கருதப்படுகின்றது. (ஐ-ஒ)

# வீரப்பனைச் சந்திக்க மீண்டும் காட்டுக்குள் கோபால் சென்றார்



சென்னை,ஓக.18

தமிழகம் மற்றும் கர்நாடக அரசுகளின் தூதராக 'நக்கீரன்' கோபால் சந்தன மரக்கடத்தல்காரன் வீரப்பனிடம் நேற்று முன்தினம் இரவு மீண்டும் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

தமிழக முதல்வர் கருணாநிதியுடன் சுமார் அரைமணி நேரம் ஆலோசனை நடத்தியபின், நக்கீரன் பத்திரிகைச் செய்தியாளர்கள் மூவருடன் காட்டுக்குக் கோபால் சென்றார்.

செல்வதற்கு முன்னர் நிபந்தனைகளை நிறைவேற்ற வீரப்பன் விதித்திருந்த காலக்கெடு எதிர்வரும் 19ஆம் திகதியுடன் முடிவடைவதாகவும், அதற்கு முன்னர் காட்டுக்குள் சென்று வீரப்பனை சந்திக்கலாம் என்ற நம்பிக்கை தனக்குள்ளதாகவும் 'நக்கீரன்' கோபால் தெரிவித்தார்.

கன்னட நடிகர் ராஜ்குமார் உட்பட 4 பேரை சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பன் கடத்திச் சென்றுள்ளதும், அவர்களை விடுவிக்க 14 நிபந்தனைகளை விதித்துள்ளதும் தெரிந்தவையே. (ஐ-ஒ)

# இந்தியாவுடனான பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க முஜாஹிதீன்கள் விருப்பம்

ஸ்ரீநகர்,ஓக.18

காஷ்மீர் குறித்த சமாதானப் பேச்சு மீண்டும் விரைவில் தொடங்கப்பட வேண்டும் என்று ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பின் தலைமை மத்தியஸ்தப் பேச்சாளர் பசல்ஹக் குரேசி விருப்பம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீநகரில் செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடக்கப்பட வேண்டும் என்ற காஷ்மீர் மக்களின் விருப்பத்துக்கு சம்பந்தப்பட்ட எல்லாத்தரப்பினரும் மதிப்பளிக்க வேண்டும் என்றும் -

கடந்த 11 வருடங்களாக மக்கள் சந்தித்துவரும் உயிரிழப்புகளும், சேதங்களும் அமைதிப் பேச்சை மீண்டும் தொடக்கப் போதுமான காரணங்கள் என்றும் - குரேசி மேலும் கூறினார்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தானும் சம்பந்தப்பட்டிருப்பதால், இறுதித் தீர்வு எட்டப்படு முன்னர் பாகிஸ்தானும் பேச்சில் சம்பந்தப்படுத்தப்படும் என்று இந்தியா உறுதியளிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

சமீபத்தில் ஒரு தரப்பான தாக்குதல் நிறுத்தம் அறிவித்து முஜாஹிதீன்கள் இந்திய அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் 'பாகிஸ்தானை பேச்சில் சேர்க்க வேண்டும்' என்ற அந்த அமைப்பின் கோரிக்கையால் முறிவடைந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# தீவிரவாத இயக்கங்களிடையே காஷ்மீரில் மோதல்; ஒருவர் பலி!!

ஜம்மு,ஓக.18

காஷ்மீரில் பாகிஸ்தான் ஆதரவு பெற்ற தீவிரவாத இயக்கங்களிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

புஞ்ச் மாவட்டம், சுரங்கோட் அருகே ஹிஸ்புல் முஜாஹிதீன் இயக்கத்தினருக்கும் லஸ்கர்-இ-தொய்பா அமைப்பிற்கும் இடையே நடந்த மோதலில் துப்பாக்கியால் சுடப்பட்டு லஸ்கர்-இ-தொய்பாவைச் சேர்ந்த தீவிரவாதி ஒருவர் இறந்தார். இந்த மோதல் ஏற்பட்ட காரணம் தெரியவில்லை என்று இந்தியராணுவத் தரப்பில் கூறப்படுகிறது.

இந்தியாவில் பாரிய தாக்குதல்களை விரைவில் நடத்தப் போவதாக மோதலில் ஈடுபட்ட இரு அமைப்புகளும் எச்சரிக்கை விடுத்திருந்ததும், அதன்படியே அவை நடத்திய வெடிகுண்டு தாக்குதல்களில் இந்தியர்கள் பலர் கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கவை. (ஒ)

சசிகலாவுடன் காரில் ரகசியப் பயணம்

# ஜெயலலிதா ஹைதராபாத்திலிருந்து நள்ளிரவில் சென்னை திரும்பியது ஏன்?

## அ.தி.மு.கவினர் கூறும் பரபரப்புத் தகவல்கள்

சென்னை,ஓக.18

தமிழக முன்னாள் முதல்வரும், அ.தி.மு.க. பொதுச் செயலாளருமான ஜெயலலிதாவும், அவரது தோழி சசிகலாவும் ஆந்திர மாநிலம் ஹைதராபாத்திலிருந்து சுமார் 18 மணி நேரம் பயணம் செய்து 700 கிலோ மீட்டர் தூரத்தைத் தாண்டி அதிகாலை 2.30 மணியளவில் சென்னையில் உள்ள வீட்டை ரகசியமாக வந்தடைந்தனர்.

தீவிரவாதிகளால் அச்சுறுத்தல் உள்ள ஜெயலலிதா இலகுவாக விமானம் மூலம் சென்னை திரும்பாமல், கடினமான கார்ப்பயணத்தின் மூலம் வந்தது குறித்து தமிழ் நாட்டில் பரபரப்பாக பேசப்படுகிறது.

கடந்தமாதம் 11ஆம் திகதி உடல்நிலை சரியில்லாததால் ஹைதராபாத்தில் உள்ள பண்ணை வீட்டில் தங்கி, ஆயுள்வேத சிகிச்சை பெறப்போவதாகக் கூறி, ஜெயலலிதாவும், சசிகலாவும் விமானம் மூலம் ஹைதராபாத் சென்று அங்கு தங்கி இருந்தனர். இதற்கிடையில் வருமானத்தை மீறி சொத்துக் குவித்த வழக்கில் 3 முறை சசிகலா நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவிடப்பட்டும் சிகிச்சையை காரணம் காட்டி அவர் நீதிமன்றம் வராமல் இருந்தார்.



வளர்ப்பு மகனின் திருமணம் நடந்த சமயம், ஜெயலலிதா தோழி சசிகலாவுடன் இணைந்து எடுத்துக் கொண்ட படம்.

இதன்பின்னர் சரியாக 30 நாள்கள் ஹைதராபாத்தில் அவர்கள் இருவரும் தங்கிவிட்டு 31ஆவது நாள் அதிகாலையில் காரில் சென்னை வந்து சேர்ந்தனர்.

இது குறித்து அ.தி.மு.க வட்டாரத்தில் விசாரித்த போது -

சனி மற்றும் வியாழன் மாற்றம் உட்பட கிரக தோஷத்துக்காக வீட்டை விட்டு வெளியே தங்கியிருந்து தோஷ நிவர்த்திக்கு யாகம் செய்து விட்டு அதிகாலை நேரத்தில் வீட்டிற்குள் சென்றால் நல்லது நடக்கும் என்று ஜோசியர் ஒருவர் கூறியதாலேயே இப்படி நடந்ததாக கூறப்படுகிறது. விமானம் மூலம் வந்தால் மாலையில் அல்லது காலையில் வரவேண்டி நேரிடும் என்பதாலேயே அவர்கள் காரில் வந்துள்ளதாகவும், உடல் வருந்த காரில் வந்ததும் ஒருவித தோஷபரிகாரம் என்று கூறப்படுகிறது.

கடந்த மே, ஜூன் மாதங்களில் தமிழகத்தில் உள்ள பிரதான காளி கோவில்களுக்கும், நவக்கிரகக் கோவில்களுக்கும், சென்று ஜெயலலிதாவும், சசிகலாவும் நடுஇரவு வழிபாடுகள் செய்ததாகவும் அ.தி.மு.க தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஜெயலலிதா, மற்றும் சசிகலா மீது பல ஊழல் வழக்குகளை தமிழ் நாடு அரசு தொடுத்துள்ளதும், அவற்றில் சிக்கலான இரண்டு வழக்குகளில் விரைவில் தீர்ப்பு வழங்கப்பட இருப்பதும் குறிப்பிடத்தக்கவை. (ஐ-ஒ-6)

கடலின் அடியில் சிக்கியுள்ள

# ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பலில் உயிருடன் எவரும் தப்பி இருக்கும் அறிகுறியில்லை!

## மீட்புப் பணிக்கு வெளிநாட்டு உதவி

மொஸ்கோ,ஓக.18

கடலின் அடியில் சிக்கியுள்ள நீர்மூழ்கிக்கப்பலில் உயிருடன் பணியாளர்கள் நடமாடும் அறிகுறிகள் தெரியவில்லை என்று ரஷ்யத் துணைப் பிரதமர் இராகினோவ் அச்சம் தெரிவித்துள்ளார்.

ஆனாலும் அவர்கள் இறந்து விட்டதாகக் கருதவேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஆபத்தான நிலையில் உள்ள நீர்மூழ்கிப் பணியாளர்களை மீட்பதற்காக அனுப்பி வைக்கப்பட்ட சிறிய ரக மீட்பு நீர்மூழ்கிக் கப்பல் -கடற்கொந்தளிப்பு மற்றும் நீர்ச் சுழல்கள் காரணமாகவும், அங்குநிலவும் கடும் இருளாலும்-விபத்துக்குள்ளாகியுள்ள நீர்மூழ்கிக்கப்பலுடன் இணையும் முயற்சி கைகூடவில்லை என்று கூறப்படுகிறது.

உலக அரங்கில்

பிராணவாயு உட்பட அத்தியாவசிய தேவைகளின் கையிருப்பு நீர்மூழ்கியில் குறைந்துவருவதால், ரஷ்ய கடற்படையின் மீட்புப் பணிகள் வெற்றியளிக்காத நிலையில் பிரிட்டன் மற்றும் நோர்வே அரசுகளிடம் ரஷ்யா உதவி கேட்டு உத்தியோகபூர்வ கோரிக்கை விடுத்துள்ளது. அந்நாடுகளில் உள்ள ரஷ்யத் தூதர்கள் மூலம் இந்தக் கோரிக்கை அரசுகளிடம் தெரிவிக்கப்பட்டது. இதனை அடுத்து பிரிட்டனும், நோர்வேயும் மீட்புக் கலங்களை சம்பவ இடத்திற்கு அனுப்பியுள்ளன. ஆனாலும் அவை எதிர்வரும் சனிக்கிழமையே அங்கு சென்றடையும் என்று கூறப்படுகிறது. அதுவரை கப்பலில் சிக்கியுள்ள பணியாளர்கள் உயிருடன் இருப்பார்களா என்பது குறித்து அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

சில தினங்களின் முன்னர் நூற்றுக்கும் மேற்பட்ட பணியாளர்களுடன் ரஷ்ய அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பல் காரணம் தெரியாத விபத்தில் சிக்கி நோர்வே கரை அருகே பாரன்ஸ் கடலின் அடியில் சிக்கி கிடப்பதும் -

பணியாளர்களையும், நீர்மூழ்கியையும் மீட்கும் பணிகளில் வெளிநாடுகளின் உதவிகளை ரஷ்யா மறுத்து வந்ததும் -

தெரிந்தவையே. (ஐ-ஒ-4)

# பிலிப்பைன்ஸ் தீவிரவாதிகளினால் பணயக்கைதிகளில் 9பேர் விடுதலை

மணிலா,ஓக.18

பிலிப்பைன்ஸில் முஸ்லிம் தீவிரவாதிகளால் 115 நாள்கள் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளில் 9பேர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

இஸ்லாமிய நாடான லிபியாவில் இருந்து வந்த நல்லெண்ணக்குழு முஸ்லிம் தீவிரவாதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பின்னர் இவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த ஒருவார காலமாக பிலிப்பைன்ஸ் விமான நிலையத்தில் காத்திருந்த லிபிய விமானத்தில் விடுவிக்கப்பட்டவர்கள் தாய்நாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கடத்தப்பட்டவர்களில் பிரான்ஸ், ஜேர்மனி, தென்ஆபிரிக்கா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர். பணயக் கைதிகளுக்காக விசேட பிரார்த்தனை நடத்தச்சென்ற கிறிஸ்தவ மத போதகர்களையும் முஸ்லிம் தீவிரவாதிகள் தடுத்துவைத்துள்ளனர்.

இவர்களை விடுவிக்க பிலிப்பைன்ஸ் அதிகாரிகள் தீவிரவாதிகளுடன் தொடர்ந்து பேச்சு நடத்தி வருகின்றனர்.

இந்தப் பேச்சுவார்த்தை வெற்றி பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும், பணயக் கைதிகளை விடுவிக்க முஸ்லிம் தீவிரவாதிகள் இணங்கியுள்ளதாகவும் பிலிப்பைன்ஸிலிருந்து பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. மோசமான காலநிலை காரணமாக அவர்களின் விடுதலை தாமதமாவதாக கூறப்படுகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் மலேசியாவில் உள்ள சுற்றுலா நகர் ஒன்றிலிருந்து பிலிப்பைன்ஸ் தீவிரவாதிகளால் சுற்றுலாப் பயணிகள் கடத்தப்பட்டது தெரிந்ததே. (ஐ-ஒ-4)

# நீதித்துறையை அவமதித்ததாக வங்கப் பிரதமர் மீது வழக்கு!



டாக்கா,ஓக.18

நீதித்துறையின் செயற்பாடு குறித்து ஆட்சேபணைக்குரிய கருத்துக்களைக் கூறியதற்காக பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா மீது அவமதிப்பு வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் உச்சநீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் டாக்கா உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில், சமீபத்தில் வெளிநாட்டு செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் பிரதமர் ஹசீனா நீதிமன்றங்கள் குற்றவாளிகளுக்கு பிணை வழங்குவது தொடர்பாகக் குறை கூறியிருந்ததாகவும் அது நீதித்துறையை அவமதிக்கும் செயல் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்குறித்து ஹசீனா கருத்துத் தெரிவிக்கையில், நீதித்துறையை வேதனைப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் தனக்கு இருக்கவில்லை என்று கூறியுள்ளார். இதேசமயம் சட்டத்தரணிகள் சங்கத் தலைவருக்கு, பிரதமர் மீது வழக்கு தொடரும் அதிகாரம் உண்டா என்பது குறித்து பங்களாதேஷில் சர்ச்சை கிளப்பப்பட்டுள்ளது. (ஓ)

## வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழக
உயிர் இரசாயனவியல் துறைத்தலைவர்
பேராசிரியர்

### செல்வி வசந்தி அரசரட்ணம்

அவர்கள் மருத்துவ பீடாதிபதியாகப் பதவியேற்று, யாழ். பல்கலைக்கழகத்தின் முதற்பெண் பீடாதிபதி என்ற பெருமைக்குரியவராகியதையிட்டு அவரை மனமார வாழ்த்துகின்றோம்.

பீடாதிபதி அலுவலகத்தினர்,
மருத்துவபீடம். (77387)

## வாழ்த்துகின்றோம்

மருத்துவபீட உயிர் இரசாயனத்துறை உயிர்நாடி ஆகவிருந்து யாழ். பல்கலைக்கழக முதற்பெண் பீடாதிபதியாக உயர்வு பெற்றுள்ள

பேராசிரியர்

### செல்வி வசந்தி அரசரட்ணம்

பேராசான் வழிநின்று
பாரெல்லாம் புகழ்கொண்டு
துறையதன் தலைவராகி
உயரங்கள் தனைக்கொண்டே
பீடத்தின் பதியாகி - முதற்பெண்ணாய்
பெரிதுவக்கும் வசந்தமே – நீர்
பலநூறு வெற்றி பெற்று
பணிசிறக்க வாழ்த்துகின்றோம்.

உயிர் இரசாயனத்துறையினர்,
மருத்துவபீடம்
யாழ். பல்கலைக்கழகம்

(77388)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவில்தலும்



### அமரர் இராசையா ஈஸ்வரதாசன்

(நொத்தாரிசு சின்னையாவின் மருமகன்—)
சாவகச்சேரி நீதிமன்ற ஆணை வழங்குநர்)

பிறப்பு 01 - 03 - 1951 இறப்பு 21 - 05 - 2000

அறிவினால் பண்பினால் உயர்ந்து
நேசமாய் பாசமாய் வாழ்ந்து
நெஞ்சங்களெல்லாம் நிறைந்து
நீங்கா நினைவிலெல்லாம் நின்று
நித்தமும் எம் கண்முன் தோன்றும்
எம் குலக்கொழுந்தே குலவிளக்கே
நீர் இறைபதம் சேர்ந்தீர் இன்று
தொண்ணூறு நாள்கள் கழிந்தும் இன்று
கலங்கிக் கண்ணீர் மல்கி அஞ்சலி செய்கின்றோம்.

எங்கள் குலவிருட்சம் அகால மரணமடைந்த நேரம் தகனம்செய்ய முடியாது தவித்த வேளை, அடக்கம் செய்வதற்கு உதவிய அயலவர்கள், நண்பர்கள், உறவினர்களுக்கும், கிராம உத்தியோகத்தர்கட்கும், எமக்கு ஆறுதல் கூறித் துயரத்தில் பங்கு கொண்டவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (18-08-2000) வெள்ளிக்கிழமை எமது தற்காலிகஇல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்தி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

மனைவி, மக்கள்,
உடன்பிறப்புகள்,
மைத்துனர், மைத்துனிமார்.

நிரந்தர முகவரி:
பொற்றெ பிலாளர் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

தற்காலிக முகவரி:
நாகலிங்க சுவாமி வீதி,
சங்கானை.
(77377)

## தாச்சிப் போட்டி

உடுவில் ஞானப்பிரகாசர் சனசமூக நிலைய வெள்ளி விழாவையொட்டி நடத்தப்பட்டுவரும் தாச்சி சுற்றுப் போட்டியின் அரைஇறுதி ஆட்டத்தில் இன்று வெள்ளிக்கிழமை இணுவில் அண்ணா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுவில் இந்து விளையாட்டுக்கழகம் பங்குபற்றும். (க-86)

## நூல் அறிமுக விழா

கலாபூஷணம நவாலியூர் நா. செல்லத்துரையின் 'சின்னவனா பெரியவனா?' சிந்து நடைக்கூத்து நூல் அறிமுக விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நவாலி வை. எம். சீ. ஏ. மண்டபத்தில் தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் எஸ். ஜெபநேசன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைலர் கலாநிதி எஸ். சிவலிங்கராசா, வலிகாமம் கல்விவலய கல்வி அபிவிருத்தி உதவிக்கல்விப்பணிப்பாளரும் எழுத்தாளருமான திருமதி கோகிலா மகேந்திரன், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் பொ. அருந்தவநாதன் ஆகியோர் நூல் பற்றிக் கருத்துரை வழங்குவர். (க-90)

## பிரதம செயலர் நெடுந்தீவுக்கு

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள வடக்கு – கிழக்கு மாகாணப்பிரதம செயலாளர் ஜி. கிருஸ்ணமூர்த்தி மற்றும் மாகாணசபை அதிகாரிகள் இரு தினங்கள் விஜயம் மேற்கொண்டு நாளை சனிக்கிழமை நெடுந்தீவுக்குச் செல்கின்றனர்.

புராதன சின்னங்களைப் பார்வையிட்டு அவற்றைப் பாதுகாப்பது தொடர்பான கலந்துரையாடலில் அவர் பங்குபற்றுவார்.

நெடுந்தீவு பிரதேச சபை, நெடுந்தீவு ப.நோ.கூ., சங்கம், உதவி அரச அதிபர் பணிமனை ஆகியன இணைந்து இவரின் விஜயத்துக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

## போட்டிப் பரீட்சை

வடக்கு-கிழக்கு மாகாண பொதுச் சேவையில் சாரதி வகுப்புக்கான போட்டி பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றது.

இந்தப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக் அனுமதி அட்டைகள் தாபாலில நேற்றுக் சேர்க்கப்பட்டுள்ளன என்றும்—

எதிர்வரும்23 ஆம் திகதிக்கு முன்னர் அனுமதி அட்டை கிடைக்காதவர்களை யாழ்ப்பாணம் வலயக்கல்விப்பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் — கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

வடபிராந்திய இந்துப் பேரவையின் ஏற்பாட்டில் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்று வரும் தெய்வீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று 'ஆர்பெறுவார் அச்சோவே' எனும் தலைப்பில் சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் உரை நிகழ்த்துவார். (க-30)

★ ★ ✱

நல்லூர் கந்தசாமி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகாசபையின் ஏற்பாட்டில் மேற்கு வீதி, ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் பிற்பகல் 5மணி முதல் 6 மணிவரை கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா நிகழ்த்திவரும் 'மகாபாரதம்' இசைச் சொற்பொழிவுத் தொடரில் இன்று 'துரோணர்' எனும் தலைப்பில் சொற்பொழிவு இடம் பெறும். (க-30)

## 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு



### அமரர் வேலுப்பிள்ளை கனகரத்தினம்

(உதவித் திட்டமிடல் பணிப்பாளர்)

தோற்றம் 30–01–1942 மறைவு 18–07–2000

எமது குடும்பத் தலைவரின் மறைவையொட்டி நாளை (19—08—2000) சனிக்கிழமை மு.ப 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: தனிப்பட்ட அழைப்புக் கிடைக்காதவர்கள் இந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மனைவி: திருமதி க. [illegible]ரியமலர்
மகள்: செல்வி க. அருந்ததி

''செல்வகிரி''
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (77394)

## 31ஆம்நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



### திருமதி ஈஸ்வரலிங்கம் ஜெயலட்சுமி

(ஈசன்) (ஜெயந்தி)

மலர்வு: 20-12-1973 உதிர்வு 18-07-2000

தோள்களில் சுமைதாங்கி
சோகத்தை கண்ணில் தாங்கி
பாசத்தோடு எம்மைத் தாங்கி
நெஞ்சினில் சுமந்த தாயே!
உன் ஆத்ம சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (18-08-2000) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
கணவன் ஈசன் மகன் சுஹாஷன்
சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்மார்
மைத்துனிமார் பேறாமக்கள், மருமக்கள்
நிற்சாமம்,
சங்கானை. (77405)

உதயன்

## குறைதீர வேண்டும்

தமிழ் மக்கள் மத்தியில் பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கவும் அதனை எடுத்துக் கூறவும் வேண்டிய பணியைச் செய்யும் அரசியல் சூழல் எம்மிடம் இப்போது இல்லை. இதனால் நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கஷ்டங்கள் ஆகியவற்றைத் துல்லியமாக எடுத்துக் கூறும் முறை குறைந்து வருகிறது.

இந்தக் குறைபாட்டை - உண்மையில் வெற்றிடத்தை - மிகச் சரியாக எடுத்துக் காட்டியுள்ளார் - வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளார் பேராசிரியர் கா. சிவத்தம்பி.

கொழும்பில் நடைபெற்ற அமரர் குமார் பொன்னம்பலத்தின் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றுகையில் பேராசிரியர் மேற்படி குறைபாட்டை எடுத்துச் சொன்னார்.

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை, அவற்றின் ன்மைகளை, - மக்களை ன்னல்களுக்கு ஆளாக்கும் பிரச்சினைகளை அவற்றின் தன்மைகளை - தெளிவாகவும் துல்லியமாகவும் வெளிப்படுத்த வேண்டியது அரசியல்வாதிகளின் பொறுப்பு-பெருங்க டமை. அத்தோடு மக்களின் பிரச்சினைகள் குறித்து அவர்கள் மத்தியிலும் வெளியிலும் பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்க உழைக்க வேண்டியவர்களும் அவர்களே.

தமிழ் மக்களின் இன்றைய அவலம் நிறைந்த வேளையில், அவர்களின் இன்னல்களையும் இடர்களையும் சம உரிமை, ஆட்சி உரிமை மறுக்கப்படுவதையும் தெளிவாகவும் கூர்மையாகவும் வெளிப்படுத்த வேண்டிய தேவை அதிகம் உண்டு.

அவ்வாறு அரசியல்வாதிகள் செய்யத் தவறுவதால், தமிழ் மக்களின் நியாயமான குறைபாடுகள், அவற்றின் உண்மைத் தன்மை வெளியே போதியளவு இப்போது தெரிவதில்லை.

இந்தக் குறைபாடு, அரசமைப்புச் சீர்திருத்தம் சம்பந்தமான அரசியல் விவாதத்தின் போது மிகத் துலாம்பரமாகத் தெரிந்தது. சந்திரிகா அரசு தனது அரசமைப்புச் சீர்திருத்த நகலின் இறுதி வடிவத்தைக் கடைசி நேரத்திலேயே தந்தது என்ற நொண்டிச் சாட்டோடு அரசமைப்புச் சம்பந்தமாக தமிழ் அரசியல் புலத்தில் விரிவாக அலசப்படவில்லை.

தமிழர்களின் பிரச்சினை - இனப் பிரச்சினை - என்ற மிகமிக முக்கியமான விடயத்திலேயே தமிழ்க் கட்சிகளால் தெளிவாகவும், கூர்மையாகவும் சொல்ல வேண்டியதைச் சொல்ல இயலவில்லை என்றால், ஏனைய விடயங்களில் அவை துல்லியமான தெளிவான கருத்துக்களைத் தெரிவிக்கும் என்று எவ்வாறு எதிர்பார்ப்பது?

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஜனநாயக வழியில் தீர்வு காணமுடியும் என்ற நம்பிக்கையுடனேயே இக் கட்சிகள் இயங்கி வருகின்றன. அதனால் ஜனநாயகத்தின் உயிரோட்டமான செயற்பாட்டுக்கு, பேராசிரியர் சிவத்தம்பி கூறுவது போன்று, ஸீண்ணத் துணிவுடன் மக்களின் பிரச்சினைகளை விவரமாக வெளிக்கொணர வேண்டும். அதன் மூலமே பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவது இலகுவாகும்.

போதிய ஆற்றலும் திறமையும் இல்லாதவர்கள் அரசியல் மாளிகையில் வாசம் செய்வதற்கு மக்கள் அனுமதிக்கலாகாது. அவ்வாறன்றி இன்றைய குறை நீடிக்குமானால், தமிழர்களின் பிரச்சினைகள் நிரந்தரமானவையாகவே தொடரும்.

மக்களுக்குச் சில வாக்குறுதிகளைக் கூறி, அல்லது சில சலுகைகளைச் செய்து அரசியல் ஆசனங்களில் அமரும் செயற்பாடு தமிழர்களின் இன்றைய பெரும் இக்கட்டான சூழ் நிலையில் எந்த வகையிலும் பொருத்தமானது அல்ல.

எங்களது பிரச்சினைகளை சிங்கள மக்களும், சர்வதேச மக்களும் வெளிநாட்டு அரசாங்கங்களும் தெளிவாகப் புரிந்து கொள்ளக் கூடியதாக, உண்மை நிலையை அறிந்து கொள்ளக்கூடியதாகக் கருத்துத் துணிச்சலுடன் வெளிப்படுத்த வேண்டும்.

பொதுத் தேர்தல் ஒன்று நெருங்கும் இவ்வேளையில் தமிழ் மக்கள் இது குறித்து ஆழமாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

# ஆசிரியர் சேவை பதவி உயர்வுகளில் முரண்பாடுகள் நீக்கப்படவேண்டும்!

## கல்வி அமைச்சுக்கு சங்கம் மகஜர்

யாழ்ப்பாணம்,ஓக.18

இலங்கை ஆசிரியர் சேவையில் பதவி உயர்வுகள் தொடர்பான திட்டத்தில் - குறிப்பாக 31-12-2000 வரையான வகுப்பு - 1க்கான பதவி உயர்வுகள் விடயத்தில் காணப்படும் சில முரண்பாடுகள் சீர்செய்யப்படவேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை முற்போக்கு ஆசிரியர் சங்கம் கல்வி உயர்கல்வி அமைச்சுக்கு அனுப்பியுள்ள மகஜரில் வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது.

முற்போக்கு ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் வீ. கணேஸ்வரன் இது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

புதிய திட்டத்திற்கேற்ப ஓர் ஆசிரியர் வகுப்பு -1 இற்கான பதவி உயர்வுக்குத் தகுதி பெறுவதற்கு 20 புள்ளிகள் பெறுவதோடு 50 வயதைக் கடந்தவராகவும் இருக்க வேண்டியுள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவை மீதான பிரமாணக்குறிப்புகளுக்கு ஏற்படுத்தப்பட்ட திருத்தங்களின் விளைவாக, கல்வி டிப்ளோமா அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப் பத்திரம் கொண்ட சகல வகைகளிலுமுள்ள சிறப்பு அல்லது பொதுப் பட்டதாரிகளுக்கு உள்வாங்கல் நடவடிக்கையின் போது ஓராண்டு சேவைக்கு 02 புள்ளிகள் வீதம் தரம் -1 இற்கு உள்வாங்கப்படுவதற்கு உதவியுள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் 50 வயதுக்கும் குறைவாக உள்ளவர்களாக இருப்பதனால் வகுப்பு-1இற்கு பதவி உயர்வு பெறமுடியாது. வகுப்பு-2 தரம்-1 இல் உச்சச் சம்பளத்திலே பல வருடங்களாகத் தேக்க நிலையில் உள்ளனர்.

புதிய திட்டத்தின் கீழ் 20 அல்லது அதற்குக் கூடுதலான புள்ளிகள் பெறும் சிரேஷ்ட ஆசிரியர்கள் - அவர்கள் 50 வயதை அடையாத காரணத்தினால் - வகுப்பு -1 இற்கு பதவி உயர்வு செய்யப்பட மறுக்கப்படுகிறார்கள். 29 வருட சேவையைப் பூர்த்தி செய்த ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியரும் 24 வருட சேவையைப் பூர்த்தி செய்த (கல்வி டிப்ளோமா உடைய) ஒரு பட்டதாரி ஆசிரியரும் தனித்தனியே 28 புள்ளிகளைப் பெற்றிருந்த போதும் இவர்கள் 50 வயதிற்குக் குறைந்தவர்களாக இருப்பதனால் வகுப்பு-1 இற்கான பதவி உயர்வுக்கு மறுக்கப்படுகிறார்கள். இதேவேளை இவர்களைவிட ஆசிரியர் சேவையில் கனிஷ்டர்களான பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் பட்டதாரி ஆசிரியர்களும் 50 வயதைப் பூர்த்தி செய்தமையாலும் 20 அல்லது அதற்குக் கூடுதலான புள்ளிகளைப் பெறுவதாலும் வகுப்பு-1 இற்கான பதவி உயர்வை பெறுவதற்குத் தகைமை பெறுகிறார்கள்.

வயதெல்லையைக் காட்டிலும் ஆசிரியரது அனுபவத்துக்கும் நீண்ட சேவைக் காலத்துக்குமே உரிய இடம் அளிக்கப்படல் வேண்டும் என்பதனை நாம் இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறோம். வயதெல்லையை ஒரு நியமமாகக் கொள்வது சிரேஷ்ட ஆசிரியர்கள் மத்தியில் மனவிரக்தியையும் வயிற்றெரிச்சலையும் ஏற்படுத்தியுள்ளது.

தங்களது 2000-14 இலக்கமும் 2000.03.27 திகதியும் இடப்பட்ட சுற்றறிக்கையில் தரப்பட்டுள்ள பதவி உயர்வுக்கான புள்ளி முறையின் படி (உள்வாங்கல் நடவடிக்கைகளுக்கு அல்ல) 1994.10.06 இன பின்னர் நியமனம் பெறும் ஒரு பட்டதாரி ஆசிரியர் 19ஆண்டுகால சேவையை முடித்து கல்வி டிப்ளோமாவும் முடித்தவராயின் மட்டுமே (19 புள்ளிகள் சேவைக்காலத்துக்கும் 01 புள்ளி கல்வி டிப்ளோமாவுக்கும்) 20 புள்ளிகள் பெற்று வகுப்பு 1 இற்கான பதவி உயர்வைப் பெறுவதற்குத் தகைமை உடையவராகிறார். ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர் ஆசிரியர் பயிற்சி பெற்றதன் பின்னர் 19ஆண்டு காலச் சேவையையும் தராதரப் பத்திரமற்ற ஆசிரியராகக் குறைந்தது இரண்டு ஆண்டு காலச் சேவையையும் (19 புள்ளிகள் பயிற்றப்பட்ட ஆசிரியர் சேவைக் காலத்துக்கும் 01 புள்ளி இரு ஆண்டு தராதரப் பத்திரமற்ற ஆசிரியர் சேவைக் காலத்துக்கும்) ஆற்றினால் மட்டுமே 20 புள்ளிகள் பெற்று வகுப்பு ஒன்றுக்கான பதவி உயர்வு பெறுவதற்குத் தகைமை உடையவராகிறார்.

இவ்வாறாக கல்வி டிப்ளோமா உடைய பட்டதாரி ஆசிரியர் ஒருவர் வகுப்பு 1 இற்கு பதவி உயர்வு பெறுவதற்கான தகைமையைப் பெற 19 வருட சேவையைப் பூர்த்தி செய்வதும் பயிற்றப்பட்ட ஆசிரியர் ஒருவர் இதனைப் பெற 21 வருட ஆசிரியர் சேவையையோ அதனிலும் கூடுதல் வருட ஆசிரியர் சேவையையோ (ஆசிரியர் பயிற்சிக்கு முன்னுள்ள சேவைக்காலத்தைப் பொறுத்து) பூர்த்தி செய்வது அவசியமாகின்றது.

கல்வி டிப்ளோமா பெற்றிராத சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ள பட்டதாரி ஆசிரியர்களின் நிலை என்ன? அவர்கள் பாகுபாடு காட்டப்படுகிறார்கள் அல்லவா?

எனவே, வகுப்பு1 இற்கான பதவி உயர்வுகள் பின்வரும் அடிப்படைகளிலே மேற்கொள்ளப்படவேண்டும் என்ற எமது யோசனைகளை முன்வைக்கின்றோம்.

✻ பயிற்றப்பட்ட ஆசிரியர் ஒருவர் அவரின் முதல் நியமனத் திகதியிலிருந்து 22 வருட சேவையின் முடிவிலோ அதன் பின்னரோ 20 புள்ளிகளைப் பெறும்போது வகுப்பு 1 இற்கான பதவி உயர்வுவைப் பெறத் தகைமை வாய்ந்தவராகக் கணிக்கப்படவேண்டும்.

✻ வகுப்பு 1 இற்கான பதவி உயர்வுகள் (உள்வாங்கல் அல்ல) நோக்கங்களுக்கு பட்டதாரி ஆசிரியர்களுக்கும் வருடமொன்றுக்கு 01 புள்ளி மட்டுமே வழங்கப்பட்டு தமது முதல் நியமனத் திகதியில் இருந்து 19 வருட சேவை உடைய கல்வி டிப்ளோமா கொண்ட பட்டதாரி ஆசிரியர்கள் வகுப்பு 1 இற்கான பதவி உயர்வைப் பெறத் தகைமை வாய்ந்தவர்களாகக் கணிக்கப்பட வேண்டும்.

✻ பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர் ஒருவரின் பயிற்றப்பட்ட ஆசிரியர் சான்றிதழுக்கு 01 புள்ளி வழங்கப்பட வேண்டும்.

✻ கல்வி டிப்ளோமா பெற்றிராத பட்டதாரி ஆசிரியர்கள் சலுகை அடிப்படையில் 25 வருட சேவையின் பின்னர் வகுப்பு 1 இற்கான பதவி உயர்வுக்குத் தகைமையுடையவர்களாகக் கணிக்கப்பட வேண்டும்.

✻ 50 வயதைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்பது பதவி உயர்வுகளுக்கான ஒரு நியமமாகக் கருதப்படலாகாது. (ஐ-51)

# பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களுக்கு மாற்று ஏற்பாடு

## அடுத்த தவணை ஆரம்பிக்க முன்

மூளாய்,ஓக.18

புதிய தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் இடம்பெயர்ந்த மக்களை பாடசாலைகளில் இருந்த வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அண்மையில் யாழ்.குடாநாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக இடம்பெயர்ந்த பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பல்வேறு பாடசாலைகளில் தங்கியுள்ளன.

இதனால் பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாத குடும்பங்களுக்கு தற்காலிக குடிசைகள் அமைத்துக் கொடுப்பதன் மூலம் பாடசாலைக் கட்டடங்களை விடுவித்துக் கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக பல அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் தற்காலிக குடிசை அமைக்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக வலிகாமம் மேற்கு மற்றும் வலிகாமம் தென்மேற்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இவ்வாறான நடவடிக்கைகள் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ஐ-99)

**உதயவாக்கு**

கருணையில் தத்துவத்தை நன்கு அறிந்து நடப்பவன் ஒரு சமயம் வையகமே தன்பால் இருப்பதைக் காண்பான்.

- *காந்தியடிகள்.*

**நாளை**

ஆவணி 3

சனிக்கிழமை

*திதி:* சதுர்த்தி

பிற்பகல் 1.28 வரை.

*நட்சத்திரம்:* உத்தரட்டாதி

காலை 6.39 வரை.

சங்கடஹர கணபதி விரதம்

*சுபநேரம்:* 3.05 - 4.35

*ராகுகாலம்:* 9.05 - 10.35

(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்



### வேல் கொண்டு வாராய்!

அலங்காரக் கந்தா! உன்னை வழிபடும்
அடியார்கள் குறைதீர்க்கும் ஆறுமுக வேலா!
அழகான வள்ளியொடு மயிலேறும் கந்தா!
அகதிகள் குரல் கேட்டுக் குறைதீர்க்க வாராய்!

அலைமோதும் அன்பர்கள் குறை கேட்ட பின்னும்
அசைவற்ற சிலையாய் நீ அமர்வது ஏனோ?
அன்னை தமிழ்மண்ணில் நாம் படும்பாட்டை
அழித்துத் துடைக்கநீ வேல்கொண்டு வாராய்.

- *ஞான.ஆதவன்*
தரம்-09
சென்.ஜோன்ஸ் கல்லூரி

### அடியாரை உருக்கிடப்பா!

உன் நாமத்தைச் சொல்ல
உள்ளம் உருகுதையா
உன் அடிகளை வணங்கிடவே
உள்ளம் உருகுதையா
உன் அழகினைப் பாடிடவே
உள்ளம் உருகுதையா
உன் அடியார்களை நல்ல
வழியில் உருக்கிடப்பா.

- *பா.சசனி*
மானிப்பாய் இந்துக் கல்லூரி.

### நம்பிக்கை தரமாட்டாயா?

யாம் இருக்க பயம் ஏன் என்றாய்
வேல் இருக்க வினை ஏது என்றாய்
யாது இருந்தும் ஏது பயன்? என்றோம்
வீடிழந்து பொருளிழந்து வீதி எங்கும் அலைகின்றோம்
நீ இருந்தும் என்ன பயன்? நல்லூரானே!
தேவர்க்கு அருள் செய்த சிவனின் மைந்தா
தென்மராட்சி மக்களுக்கு அருள் செய்யாயோ?
நம்பினோர்க்கு கை கொடுக்கும் நல்லைக் கந்தா
நம் இனத்தைக் காப்பதாக நீ
நம்பிக்கை தரமாட்டாயா; நல்லூரானே?

- *தர்சிகா - சந்திரதாஸ்*
தரம்:-6
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

### காத்து நிதம் ஏங்குகிறோம்

வேலவனே கதிர் வேலவனே
உன்னைக் காணாது தவிக்கின்றோமையா
பார்த்துப்பார்த்துக் கண்ணும் பூத்ததையா
பாராமல் பட்டதொல்லை சொல்ல முடியாதையா
உண்ண உணவின்றி உடுக்க உடையுமின்றி
நம்மவர் நிலையென்னவென்று சொல்வதையா
கூழ்குடிக்க வழியுமின்றி வீதி வீதியாய்
அலையும் துயர் தீர்ப்பதும் யாரையா?
எம்மவர் அவல நிலை போக்க உனைத்தவிர
மாநிலத்தில் தெய்வம் வேறுமுளதோ ஐயா?
எம்மவர் துயர் துடைக்க உன் வேலாயுதம்
எடுத்து விரைந்து ஓடி வா ஐயா!
உந்தன் வரவு பார்த்து இந்த மண்ணில்
காத்து நிதம் ஏங்குகிறோம்!

- *செல்லத்துரை பிரசாத்*
யாழ்.இந்துக் கல்லூரி

# அடுத்து வரும் வாரங்களில் குடாநாட்டில் தேர்தலுக்கு முன் பெரும் மோதல்கள்

'கைமாறும் நிலையில் குடாநாடு?' என்ற தலைப்பில் கொழும்பிலிருந்து வெளியாகும் 'ஆதவன்' வார சஞ்சிகையின் 13-08-2000 திகதிய இதழில் 'களநிலைவரம்' என்ற பத்தியில் 'கௌதமன்' வரைந்த கட்டுரை இது.

வடக்கு கிழக்குக்கு வெளியே தென்பிராந்திய கடற்பரப்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் அமெரிக்கப் படைகளுடன் இணைந்து இலங்கைப்படையினர் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அமெரிக்கப்படையினரின் பசுபிக் பிராந்திய படையணி கடந்த ஐந்து வருடங்களாக இலங்கைப் படையினருக்கு வழங்கிவரும் பயிற்சி நடவடிக்கையே இதுவாகும். இந்தியா உட்பட 20 நாடுகள் அமெரிக்கப் படையணியின் இந்த உதவியைப் பெறுகின்றன. இதன் ஒரு கட்டமாகவே கடந்த மாதம் 31ஆம் திகதி இந்த கூட்டுப்பயிற்சி நடவடிக்கை நாட்டின் தென்பகுதியில் ஆரம்பமானது. அமெரிக்காவின் முப்படையினருடன் இணைந்து இந்தப் பாரிய பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் பயிற்சி நடவடிக்கைக்காக அமெரிக்க விசேட நிபுணர்கள் குழுவொன்றும் இங்கு வந்துள்ளது. இவ்வருடத்தில் நடைபெறும் மூன்றாவதும், இறுதியுமான நடவடிக்கை இதுவாகும்.

## மிக முக்கியத்துவம் வாய்ந்த உதவி

இலங்கைப் படையினருக்கு அமெரிக்கா வழங்கி வரும் பல்வேறு உதவிகளில் இது மிக முக்கியத்துவம் வாய்ந்தது. கடந்த ஐந்து வருடங்களாக இந்த உதவி நடவடிக்கை தொடர்கிறது. 1995 முதல் அமெரிக்கா இந்த பயிற்சி நடவடிக்கையை அதிகரித்து வருகிறது. இம்முறை நடைபெறும் இப்பயிற்சியில் இலங்கை இராணுவத்தின் 53ஆவது படையணியைச் சேர்ந்த 100பேரும், கடற்படையை சேர்ந்த 60பேரும் விமானப்படையைச் சேர்ந்த 40 பேரும் பங்குபற்றுகின்றனர். சுமார் இருவாரம் இப்பயிற்சி நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. வழமையை விட இந்தப் பயிற்சி நடவடிக்கை விரிவாக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளைவிட, அமெரிக்கா இலங்கைக்கு 100 துருப்புக்காவி வாகனங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. தென் கொரியாவில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படைகள் பயன்படுத்திய வாகனங்களே இவையாகும். இவை அனைத்தும் அடுத்தசில நாள்களில் வடக்கு - கிழக்கு போர் முனைப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

## தாக்குதல் விமானங்கள்

இதே நேரம் ஆயுதத் தளபாட கொள்வனவையும் அரசு தொடர்ந்தும் மேற்கொண்டே வருகிறது. உக்ரேனிலிருந்து "மிக்27" ரக தாக்குதல் விமானங்கள் நான்கு அண்மையில் கொழும்பு வந்து சேர்ந்து தற்போது அவை தாக்குதல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றன. இரு ஆசனங்களைக் கொண்ட - ஒலியின் வேகத்திலும் இருமடங்கு வேகம் கூடிய இந்த தாக்குதல் விமானத்தில் 23 மி.மீ. ரக கலிபர் துப்பாக்கி பொருத்தப்பட்டுள்ளதுடன் மிக இலகுவில் ரொக்கட் குண்டுகளை ஏவக் கூடிய விதத்திலும் நவீன கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. அத்துடன் இந்த "சுப்பசொனிக்" ரக தாக்குதல் விமானம் கட்டுநாயக்கா விமானத் தளத்திலிருந்து புறப்பட்டு 7 நிமிடங்களில் யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்து அங்கு தாக்குதல்களை நடத்திவிட்டு திரும்பக்கூடியவை. இந்த வகை விமானங்கள் நான்கு மேலதிகமாக விரைவில் இங்கு வந்து சேரவுள்ளன. இதேபோன்று எம்.ஐ-24 ரக தாக்குதல் விமானங்கள் பத்தும் விரைவில் இங்கு வந்து சேரவுள்ளன. வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனையின் பேரில் இந்த ஹெலிக்கொப்டர்கள் உக்ரேனிலிருந்து கொள்வனவு செய்யப்படுகின்றன.

## பறக்கும் டாங்கிகள்

ரொக்கட்டுகள் மற்றும் சிறிய ரக ஏவுகணைகள் போன்ற பீரங்கிகள் பொருத்தப்பட்ட இந்த ஹெலிகொப்டர்கள் பறக்கும் யுத்த டாங்கிகள் என வர்ணிக்கப்படுபவை. தரையில் ஒரு யுத்த டாங்கி எவ்வகைத் தாக்குதல்களையெல்லாம் மேற்கொள்ளுமோ அவ்வாறு வான்பரப்பில் இந்த ஹெலிகொப்டர்கள் செயற்படக்கூடியவை. இந்த ஹெலிகொப்டர்களுக்கும் "மிக்-27" ரக விமானங்களுக்கும் வெளிநாட்டு விமானிகளே அமர்த்தப்பட்டுள்ளனர். இதற்காக அரசு தினமும் பெருமளவு பணத்தைச் செலவிடுகிறது. ஏற்கனவே இலங்கை அரசு அவசர அவசரமாக வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்த பல்வேறு இராணுவத் தளபாடங்களை கையாள்வதற்கான பயிற்சிகளை வழங்கவும் வெளிநாட்டு ராணுவ நிபுணர்கள் பலர் இலங்கை வந்து தற்போது யுத்த முனைகளில் படையினருக்கு உதவி வருகின்றனர். கடந்த சில மாதங்களாக வடக்கில் பாரிய மோதல்கள் எதுவும் நடைபெறாத நிலையில் குறிப்பாக, யாழ். குடாநாட்டில் தங்களை பலப்படுத்தும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

## தருணம் பார்த்து காத்திருக்கும் புலிகள்

இதே நேரம் புலிகளும் தங்கள் தாக்குதல் நடவடிக்கைகளுக்காக தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக படையினர் புலிகளுக்கு எதிராகப் பாரிய நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை. குடாநாட்டிற்கான தரை வழிப்பாதையை கைப்பற்றுவதற்காக 1997ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட "ஜெயசிக்குரு" இராணுவ நடவடிக்கை தோல்வியில் முடிவடைந்த பின்னர் வன்னியூடான பிரதான விநியோகப் பாதையான ஏ9 பாதையைக் கைப்பற்றும் முயற்சி கைவிடப்பட்டு மன்னார் பூநகரிப் பாதையைக் கைப்பற்றுவதற்கான "ரணகோஷ" நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டனர். இந்த நடவடிக்கையும் பின்னர் புலிகளின் ஓயாத அலைகள்-3 தாக்குதலை தொடர்ந்து கைவிடப்பட்டது. புலிகளுக்கு எதிராக வன்னிப்பகுதியில் படையினர் அடுத்தடுத்து மேற்கொண்ட மேற்படி இரு படை நடவடிக்கையும் பலத்த இழப்புக்களைத் தொடர்ந்து புலிகள் கடுமையான எதிர்த்தாக்குதலையுமடுத்து கைவிடப்பட்ட அதேநேரம் இப்பகுதிகளில் புலிகள் மேற்கொண்ட "ஓயாத அலைகள்" தாக்குதல்கள் புலிகளுக்கு முழுப் பலனையும் அளித்துள்ளன. "ரணகோஷ" படை நடவடிக்கை மூலம் படையினர் பல மாத காலத்தில் கைப்பற்றிய பகுதிகளை புலிகள் ஒரு சில நாள்களினுள் கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்தனர். இந்தப் பிரதேசங்களில் எவையும் இதுவரை படையினரால் மீட்கப்படவில்லை. எனினும் புலிகள் தங்கள் தாக்குதலை அங்கிருந்து ஆனையிறவுப் பகுதிக்கு நகர்த்தி அப்பிரதேசத்தையும் கைப்பற்றி அதனூடாக தென்மராட்சியின் பெருமளவு பிரதேசங்களுக்கு நகர்ந்து தற்போது யாழ். நகரின் நுழைவாயிலில் நிலைகொண்டுள்ளனர்.

## இழந்தவை மீட்கப்படவில்லை

இப்பகுதியில் கூட படையினரால் புலிகள் இதுவரை கைப்பற்றிய பிரதேசங்களில் எதனையும் மீட்க முடியவில்லை. படையினரின் ஆயுதபலத்தை பல்வேறு வழிகளிலும் அதிகரிப்பதற்காக அவர்கள் அரசிடம் கோரிய ஆயுதங்களும் போர்த்தளபாடங்களும் வந்து சேர்ந்துவிட்டன. தற்போது அவை யுத்த முனைகளில் முக்கிய பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ளன. எனினும் பாரிய படை நகர்விற்கான முயற்சிகளில் படையினர் இறங்கவில்லை. குடாநாட்டினுள் புலிகள் முன்னேறிக் கைப்பற்றிய பகுதிகளை மீளக்கைப்பற்றும் வரை படையினரால் குடாநாட்டில் நிம்மதியாக நிலை கொள்ள முடியாது. புலிகள் தாங்கள் கைப்பற்றிய பகுதிகளிலிருந்து மேலும் முன்னேறக் கூடிய சாத்தியங்களுமுண்டு. இந்த முன்னேற்றங்களைத் தடுத்துநிறுத்தி குடாநாட்டில் படையினர் வசமிருக்கும் ஏனைய பகுதிகளுக்கான அச்சுறுத்தல்களை தவிர்க்க வேண்டுமானால் புலிகள் வசமிருக்கும் பகுதிகளை எப்படியாவது மீளக் கைப்பற்றவேண்டும். இல்லையேல் குடாநாட்டிற்கும் 'வன்னி'யின் நிலைமை வந்துவிடுமென்றே இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இது குறித்து படையினரும் நன்கு அறிந்துள்ளதால் தொடர்ந்தும் தற்காப்புச் சமரை நடத்துவதா, அல்லது தாக்குதல் சமரை ஆரம்பிப்பதா என்ற குழப்ப நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

1995இல் மூன்றாவது ஈழப்போர் ஆரம்பமானதைத் தொடர்ந்து படையினர் புலிகள் வசமிருந்த பகுதிகளைக் கைப்பற்றி புலிகளுக்கு நெருக்கடிகளைக் கொடுக்கலாமென முனைந்து வந்தார்களே தவிர புலிகளின் இராணுவ பலத்தை அவர்களால் ஒடுக்கமுடியவில்லை. படையினர் தங்கள் வசமுள்ள பிரதேசங்களை இலக்கு வைத்தே முன்னேறுகிறார்கள் என்பதையுணர்ந்த புலிகள் நிலைமைக்கேற்ப பின்னோக்கி நகர்ந்து தங்களின் ஆட்பலத்தையும் ஆயுதபலத்தையும் குலையவிடாது நன்கு பராமரித்தே வந்துள்ளனர். 1995இல் குடாநாட்டை படையினர் கைப்பற்றியபோது அவர்களது முதுகெலும்பு முறிக்கப்பட்டு விட்டதாகவே அரசதரப்பில் கூறப்பட்டு வந்தது. வெளிநாட்டு இராணுவ நிபுணர்களும் இதனையே கூறி வந்தனர். இந்த நிலையில்தான் புலிகள் 96ஆம் ஆண்டு நடுப்பகுதியில் முல்லைத்தீவு முகாம் மீது பாரிய தாக்குதலைத் தொடுத்து அப்பிரதேசம் முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர். இதன் பின் படிப்படியாக அவர்கள் தங்கள் தாக்குதல்களை அதிகரித்ததுடன் படையினர் மேற்கொண்ட பல பாரிய படை நடவடிக்கைகளையும் முறியடித்தனர். அத்துடன் படையினர் கைப்பற்றிய பெருமளவு நிலப்பிரதேசங்களையும் அவர்களிடமிருந்து மீட்கத் தொடங்கினர். இதன் இறுதிக் கட்டமாக தற்போது குடாநாட்டைக் கைப்பற்றும் தீவிர முயற்சியில் புலிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

## தாக்குதல்கள் இடைநிறுத்தம்

ஆனையிறவு படைத்தள வீழ்ச்சியைத் தொடர்ந்து குடாநாட்டினுள் நுழைந்து புலிகள் யாழ்.நகரை சமீபித்த நேரத்தில் இலங்கை அரசு சர்வதேச உதவியை நாடவே நிலைமை மோசமானது. குடாநாட்டிற்குள் சிக்கிப் போயிருக்கும் படையினரை அங்கிருந்து வெளியேற்ற உதவ இந்தியா முன்வந்த அதே நேரம் இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்க வேறு பல நாடுகளும் முன்வந்தன. இந்த நேரத்தில் புலிகள் தமது நகர்வுத் தாக்குதலை இடைநிறுத்தினர். மே மாத நடுப்பகுதியுடன் பாரிய மோதல்கள் முடிவுக்கு வந்தன. அதன்பின்னர் தினமும் சிறுசிறு மோதல்களும் ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதல்களும் நடைபெறுகின்றனவே தவிர பாரிய படை நகர்வோ மோதல்களோ இடம்பெறவில்லை. புலிகள் அடுத்த கட்ட தாக்குதலுக்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக கூறும் புலனாய்வு வட்டாரங்கள் புலிகளின் தாக்குதலை தடுப்பதற்கான தற்காப்பு முயற்சிகளில் படையினர் ஈடுபட்டு வருவதாகவும் கூறியுள்ளன. இதனால் அடுத்து வரும் வாரங்களில் குடாநாட்டில் பாரிய மோதல்கள் ஏற்படலாமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்த மோதல்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கு முந்திய மோதல்களாக இருக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## இரு தரப்பிடமும் ஆயுதங்கள்

படையினர் வசம் புதிய நவீனரக ஆயுதங்கள் பல இருக்கும் அதே நேரம் புலிகள் வசம் படையினரிடமிருந்து கைப்பற்றிய நீண்டதூர ஆட்லறிகள் மோட்டார்கள் பலவுமுள்ளன. இவற்றை புலிகள் படையினருக்கு எதிராகக் கடுமையாக பயன்படுத்துவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே புலிகள் பலாலி விமானத் தளம் மீதும் காங்கேசன்துறை முகாம் மீதும் ஆட்லறித் தாக்குதல்களை நடத்தி படையினருக்கு பெரும் நெருக்கடிகளை கொடுத்திருந்தனர். பாரிய மோதல்கள் நடைபெறும்போது இவற்றின் மீது தாக்குதல்களை நடத்துவதன் மூலம் படையினருக்கான விநியோகங்களை தடுக்கும் முயற்சியில் புலிகள் ஈடுபடுவர். இதனால் இவற்றுக்கு மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில் படையினர் உள்ளனர். இல்லையேல் மோதல்களில் படுகாயமடையும் படையினரை அப்புறப்படுத்தமுடியாத நிலை ஏற்பட்டுவிடும்.

இந்நிலையில் குடாநாட்டில் மிக விரைவில் பாரிய மோதல்கள் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுவதால் அந்தமோதல் குடாநாடு யார் வசம் இருக்குமென்பதை உறுதிப்படுத்தக் கூடிய மோதலாகவே அமையுமெனவும் அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.


T.B.C RADIO LONDON

சிற்றலையில் ரீ.பீ.சி
உலகமெங்கும் தமிழ் முழங்க மீண்டும்
தமிழ் சிற்றலையில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
சிற்றலை 13 அலைவரிசை 21590 MHZ

தேசத்தின் நேசங்களுக்கான சிற்றலை ஒலிபரப்பு
தினமும் ஸ்ரீலங்கா நேரம் மாலை 6.30 முதல் 7.30வரை
ஒலிபரப்புத் தெளிவு பற்றிய கருத்துக்களை எங்களுக்கு எழுதுங்கள்.
மற்றும் ஆக்கங்களுக்கும் விமர்சனங்களுக்கும்
தொடர்பு கொள்ள:

தொலைபேசி: (44) 020 8864 0909
தொலைநகல்: (44) 020 8864 0700

T.B.C Radio London,
P.O Box 383 Harrow, HA1 3 FW
WWW. TBC. LONDON. COM

(C/12506)

உலகமெங்கும் தமிழ் முழங்க வழி செய்திடுவோம்.



UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

VACANCY

Applications will be received by me upto 08th September 2000, for the Post of BOOK-KEEPER, GRADE II. SEGMENT 'B' from suitable candidates.

**Salary Scale**: Rs. 6460 - 10x110; 7x130 - 8470/- p.m

**Qualifications :**

1. G.C.E (Ordinary Level) Examination in six (06) subjects at not more than two (02) sittings with at least three (03) credit passes including credit passes in Sinhala/Tamil/English Language or Literature and Arithmetic/ Commercial Arithmetic/ mathematics;

AND

2. **EITHER** (a) The National Certificate in Business Studies of the Sri Lanka Technical College/ Polytechnical Institute under the Ministry of Higher Education/ Ministry of Labour & Vocational Training;

OR (b) Passes in three (03) subjects including Accountancy and commerce & Finance on one and the same occasion at the G.C.E. (Advanced Level) Examination.

**Age:** Not more than 45 Years

**Selection :** By Test and Interview.

Applications should be made on the forms available in the Office of the Assistant Registrar/Establishments of this University, on a payment of Rs. 20/- for each application form, at the People's Bank, University of Jaffna Branch or at the Shroff's Counter of this University. Those who wish to obtain the forms and details by post, should send a Money Order/ Postal Order to the value of Rs. 20/- in the name of the Bursar, University of Jaffna, together with a self-addressed Rs. 3.50 stamped envelope of 23x10 c.m, in size. Applications sent on specified forms will only be accepted.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their appointing authority. Age limit is not applicable to those who are in service.

Applications received after the closing date and the applications on which the particulars are stated illegibly will be rejected.

**REGISTRAR**
University of Jaffna,
Jaffna.
2000-08-15

(C/12532)

# நம் இளைய சமுதாயத்துக்கு ஞானம் தரும் கல்வி அவசியம்

உலக்கை தேய்ந்து உளிப்பிடி' ஆகுதல் போன்று, இன்று மேல்நாட்டு நாகரிகங்களாலும் படாடோபங்களினாலும் மனிதனது ஆன்மீக உணர்வு குன்றிவிட்டது. அதனால் மனிதன் இன்று மனிதத்தன்மையை இழந்து, விலங்குகளிலும் பார்க்கக் கீழ்நிலை நோக்கிச்சென்று கொண்டிருக்கிறான். அதாவது உருவத்தில் மனிதனாகவும் நடத்தையில் விலங்குகளை விடக் கேவலமாகவும் நடந்து கொள்கிறான்.

இதன் காரணத்தை ஆராய்ந்தால் சீலம் இல்லாத கல்விதான் அடிப்படையாக அமைந்துள்ளமை புரியும்.சீலம்தான் வாழ்க்கையின் உண்மையான வலிமை. கல்விமான்களும் இளைஞர்களும் சீலமே வாழ்க்கையில் மிக முக்கியமானதென்று கருதி, அதைப் போற்றி வளர்க்க வேண்டும். சீலமும் மனித மேம்பாடும் இல்லாதபோது, கல்வி அறிவு, உடல்வலிமை, பதவி, செல்வம் என்பன யாவும் பயனற்றவையாகும். மாணவர்களுக்கு நீதி நெறியும், தார்மீக நெறியும், ஆன்மீக நெறியும் ஒழுங்காகக் கற்பிக்காத காரணத்தால் ஏற்பட்ட அவல நிலையை இன்று நாம் காண்கின்றோம். கல்வி என்பது இன்று கடைச் சரக்காகி விட்டது.

வெறுமையான நூலறிவு, கல்வியேயல்ல. நற்குணம், நற்புத்தி, சத்தியநெறி, பக்தி, ஒழுக்கம், கடமை என்பவற்றைக் கற்பிக்கும் கல்வியே உண்மையான கல்வி. மாணவர்கள் இவற்றையே கற்றுத் தெளியவேண்டும்.

மாணவர்கள் பெற முயலவேண்டிய மிக உயர்ந்த பட்டம் 'அமிர்த புத்திர' - அதாவது இறவாமைபெற்ற பிள்ளைகள் என்பதாகும். இதைவிட மேலான பட்டம் இல்லை.

மாணவர்கள் விருத்தியாக்கிக் கொள்ளவேண்டிய நற்பண்புகள் தேசாபிமானம், தெய்வாபிமானம், தர்மாபிமானம். இவற்றை விருத்தி செய்வதன் மூலம் தாமும் உயர்வடைந்து தாம்வாழும் சமூகத்தையும் உயர்த்திக் கொள்ளமுடியும். நாம் பெறும் அறிவும் பணமும் சமூக நலனுக்கு பயன்படுத்தப்படல்வேண்டும். 21ஆம் நூற்றாண்டில் ஆன்மீகக் கல்வியின் வளர்ச்சி மிகவும் இன்றியமையாததாகி விட்டது. பாவத்துக்கு அஞ்சுவதையும், இறைவன்மீது அன்பையும், தெரிந்து கொள்ளவேண்டும். கல்வி அறிவில்லாத பிராணிகள் கூட தமக்கென்று ஓர் ஒழுக்கநெறியைப் பின்பற்றுகின்றன. ஆயின் மனிதனோ கல்வி அறிவு இருந்தும் தனக்குள்ள ஒழுக்க நெறியை பின்பற்றுவதில்லை. "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

**ஞானக்கதிர்**

கிடைத்தற்கரியது மனிதப் பிறவி. அத்தகைய பிறவியைப் பெற்ற மனிதன் இவ்வாறு வாழலாமா? 'கல்வியின் முடிவு ஒழுக்கம்' என்பதற்கேற்ப நாம் செயற்பட

## திருமதி ம. நவரத்தினம்

சமூகத்தில் ஒழுக்கத்தையும் இன்று மக்கள் மறந்துவிட்டனர். எனவே மனிதனுக்கு இறவா வாழ்க்கையைக் கொடுக்கக்கூடிய ஒரு கல்வி முறையே உண்மையான சிறந்த கல்வி ஆகும். இதனை அளிப்பதில் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெரும் பங்குண்டு. அவர்கள் தாம் நல்லமுறையில் வாழ்ந்து காட்டுவதன் மூலம் நல்ல மாணவர்களை உருவாக்கிக் கொள்ளலாம். இறைவன் மீது அன்பு செலுத்தவும், பாவத்திற்குப் பயப்படவும், சமூகத்தில் நன்னடத்தையுடன் வாழவும் கல்வி உதவவேண்டும்.

மனித வாழ்க்கையில் எளிமை, புனிதத்தன்மை, தெய்வீகத்தன்மை, புத்துயிர்ப்பு என்பவற்றை ஆராய்ந்து வேண்டும். வெறும் உத்தியோகத்திற்காகவும், பட்டம் பதவிகளுக்காகவும், சீவனம் பண்ணுவதற்காகவும் கல்வி கற்கத் தேவையில்லை. இம்மைக்கும் மறுமைக்கும் ஏழேழு பிறவிக்கும் எம்மைத் தொடர்வது கல்வி. ஆதலால் ஞானம் தரும் கல்வியை இளம் சமுதாயத்தினர் வலிந்து கற்க வேண்டும்; ஒழுக்க சீலர்களாகத் திகழவேண்டும்; ஒப்புயர்வற்ற சமுதாயத்தை வளர்க்க வேண்டும்; அறிவுணர்வுடன சேவையாற்ற வேண்டும். இத்தகைய மனிதப் பண்புடையவனாகத் திகழவே கல்வி அளிக்கப்படவேண்டும். கல்வி கற்பது சாவில் முடிவதற்கா? இல்லை. மனிதன் அமரத்துவம் பெறுவதற்கே ஆகும்! ★

# கல்வி நிர்வாக சேவைக்கு ஆள்சேர்க்க விசேட பரீட்சை

யாழ்ப்பாணம்,ஓக.18

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவும் இலங்கை கல்வி நிர்வாக சேவை அலுவலர்களின் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும்முகமாக இலங்கைக் கல்வி நிர்வாக சேவைக்கு உடனடியாக ஆள்சேர்ப்பு செய்யப்பட உள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் இம் மாதம் 28ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரமாகவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரனதும் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனாவினதும் முயற்சியினால் வடக்கு - கிழக்கு மாகாண சேவைக்கு என விசேடமாக இந்த ஆள்சேர்ப்பு நடைபெறவுள்ளது.

திறந்த போட்டிப்பரீட்சை மூலம் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தமிழ்மொழி, சிங்களமொழி, நுண்கலை, உடற்கல்வி, ஆரம்பக்கல்வி, முறைசாராக்கல்வி ஆகிய பாடங்களுக்கு அலுவலர்கள் சேர்க்கப்படவுள்ளனர்.

எதிர்வரும் செப்ரெம்பர் 22ஆம் திகதி விண்ணப்ப முடிவு திகதியாகும்.

இலங்கையின் எப்பாகத்தில் வசிப்பவர்களும் இப்போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும். ஆனால் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி வடக்கு - கிழக்கு மாகாணத்தில் குறைந்தது பத்து வருடகாலம் சேவையாற்றுதல் வேண்டும் என்பது நிபந்தனையாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-க-6)

## நூலகர் நேர்முகத்தேர்வு

நூலகர் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கான நூலகர் பதவிக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். செயலக மேலதிக அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இந்த நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் சேவைச் சான்றிதழ், அடையாளஅட்டை, பிறப்புச்சான்றிதழ், கல்வித் தராதரப்பத்திரங்கள் போன்றவற்றுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு:-

செல்வி எஸ்.பொற்செல்வி, ஏ.தெய்வேந்திரம், செல்வி எஸ்.புவனேந்திரன், கே.சௌந்தரராஜன், செல்வி எம்.தவமணிதேவி, செல்வி கே.கிருபாகுமாரி, செல்வி எம்.சுபத்திரன், செல்வி கே.சுமதி, எஸ்.மகாலிங்கம், செல்வி ரி.தவமலர், கே.எஸ்.விஜயகுமார், செல்வி என்.ராகினி, செல்வி ஏ.ராஜினி, செல்வி எஸ்.வசந்தா. (ஐ-5-10)


உ

ஆண்டொன்று ஆகுமுன்னே ஆயிரமாயிரம் அன்பு நெஞ்சங்களைத் தன்னகத்தே அள்ளிக் கொண்ட

**மகா சில்க்ஸ்** புடைவை அகத்திற்கு

**இன்று முதலாவது பிறந்தநாள்**



**மேகத்திரையினை மேவி மிளிரும்**
**வானவில்லின் வர்ண எழிலோ எழில்**
**'மகா சில்க்ஸ்'ஸின் பட்டுவர்ணங்களே!**
**மே(தி)னியில் மேவிப் பளிச்சிடும் எழில்.**

ஓராண்டுப் பூர்த்தியை நிறைவு செய்யும் இந்நாளில், தன்னோடு இணைந்து கொண்ட அன்பு நெஞ்சங்களுக்கும், இனியும் இணையும் அன்பு உள்ளங்களுக்கும் தனது இதயம் கனிந்த நன்றிப் பெருக்கை அள்ளி வழங்குகின்றது.

**மகா சில்க்ஸ்**

நாளுக்கு நாள் மாறும் நாகரீக உலகின் நீடித்த பாவனைக்காய் வெளிநாடுகளிலிருந்து தருவித்த
★ ஸ்கேட் அன் பிளவுஸ் ★ பஞ்சாபி ★ சாறி ★ சாறிக்கேற்ற பிளவுஸ் தினுசுகள்
★ ஆண்கள், சிறுவர்களுக்கான ஆடைகள் மற்றும்
★ மங்கள வைபவங்களுக்கான பட்டுப் புடைவைகள்
இன்னோரன்ன பலரக தினுசுகளின் மகத்தான தெரிவுக்கு

**மகா சில்க்ஸ்**

**32, 40A, நவீனா சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.**

விஷ்ணு வீடியோ முன்பாக **கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.**

(C/12527)


# இலங்கையில் தமிழன் படும் அவதி

தமிழ்மானிடர் இலங்கைதனில் தினமும்படும் பாடு
தனைஓதிட மனவேதனை எனைவாட்டுது நீடு
உமிழ்குண்டுகள் பலகோடிகள் அவர்மேனியின் ஊடு
உயிர்சாய்ப்பன, தினம்பாய்வன, உறுமும்தனை லோடு!

வீழ்குண்டுகள் எரியூட்டின தமிழ்வீடுகள் மீது
வெடிஓசையில் செவிடாயின பலமாந்தரின் காது!
பாழ்பட்டது தமிழ்மாநிலம் சமர்எய்திய போது
பண்பட்டவர் பண்பாட்டினில் இனிஎஞ்சுதல் யாது?

அடிபாடுகள் இடையேதொடர் வெடிகுண்டுகள் பட்டு
அழுவார்பலர் விழுவார்சிலர், அந்தோஉயிர் விட்டு
வெடிஓசைகள் சகியாதவர் மனநிம்மதி கெட்டு
விசரோஎன நடைபாதையில் திரிவார்இடர் பட்டு

இளமாதரின் பலவேறிடம் படையார்கரம் தடவும்
இதுதாங்கிலர் மனம்பொங்குவர் அவரின்கரம் படவும்
உளவேதனை உறுவார்சிலர் துணிவார்உயிர் விடவும்
ஓர்மம்மிக உடையார்சிலர் பொருவார்அவர் சுடவும்

சிலமங்கையர் படைகொண்டவர் சிலரால்உதை யுண்டார்
சிலமங்கையர் படைகொண்டவர் சிலரால்சிதை யுண்டார்
சிலமங்கையர் படைகொண்டவர் சிலரால்கொலை யுண்டார்
சிலமங்கையர் படைகொண்டவர் சிலரால்புதை யுண்டார்

கடமைக்கென வயலுக்கென கடைகட்கென சென்றார்
கைப்பட்டவர் தமையும்பிறர் காணாமலே கொன்றார்
சடலங்களைப் புதைத்துச்சிலர் தக்கோர்என நின்றார்
சதிசெய்தவர், இதுசெய்தவர் தாமல்லரே என்றார்

வெறிகொண்டவர் சமருற்றதால் தமிழ்மானிடர் எலும்பு
விதந்தோதிட முடியாவகை எங்கெங்கணும் எலும்பு
கறியுப்பிவண் விளைசெம்மணிக் கடல்மேட்டிலும் எலும்பு
கழிவார்குழி யுள்ளும்தெருக் கரைமீதிலும் எலும்பு

தொடரும்எறி கணையால்இருப் பிடங்கள்பலர் துறந்தார்
துணைஒன்றிலர் எனவேஇடம் பலவாய்அவர் பறந்தார்
சுடரும்வெயில் தானும்பெரு மழையும்பலர் மறந்தார்
சோகம்மிகத் தாகம்மிகத் தயரால்உயிர் துறந்தார்.

வீடற்றவர் பொருளற்றவர் கதியற்றவர் திரிவார்
விடிவற்றவர் உறவற்றவர் விதியற்றவர் எரிவார்
நாடற்றவர் ஆகும்படி வெடிகுண்டுகள் சொரிவார்
ஞாலத்திடை யாரித்துயர் நாட்டின்நிலை புரிவார்?

கட்டில்இலை என்பார்பலர் கதவில்லையே என்பார்
கதிரைபல மேசைபல பறிபோயின என்பார்
விட்டுச்சென்ற பொருள்கள்பல வீட்டில்இலை என்பார்
வீடேஇலை என்பார்இனி விடிவேஇலை என்பார்

தாய் தந்தையர் தம்மைப்பலர் சமரிற்பறி கொடுத்தார்
சமராடலை விலகிச்செலத் தமிழர்தமைத் தடுத்தார்
நோய் உற்றவர் மருந்தின்றியே பலபேர்உயிர் விடுத்தார்
நுகர்வுப்பொருள் இல்லார்பலர் பிச்சைக்கலம் எடுத்தார்

புகுவார்அவர் தமிழர்எனில் போம்பாதையில் தடைகள்
பொருந்தாதன பேசிச்சிலர் உரிவார்அவர் உடைகள்
தகுமாஇது சரியாஎனில் தருவார்இலை விடைகள்
தமிழ்மண்ணினில் இவைபோல்வன தமிழர்குறு முடைகள்

பயிலும்பல கூடம்தனில் படிப்பைஇலை ஆக்கி
பக்கத்துள குடிகள்தமைச் சேய்மைக்கிட மாக்கி
துயிலும்இர வெனிலும்பல துப்பாக்கிகள் தூக்கி
சோதிப்பென வரமானிடர் கவல்வார்துயில் நீக்கி

வயதில்இளை யோர்க்குத்தினம் மனதில்பெரும் ஏக்கம்
வருமோபடை சுடுமோஎனும் நினைவால்இலை தூக்கம்
அயலில்சமர் விளைவால்பலர் மனதில்பெரும் தாக்கம்
அந்தோதுயர் அறுமோஇனி வருமோபடை நீக்கம்?

பசிவேதனை கொள்ளத்தினம் பாலுக்கழும் சேயே
பதறித்துடி துடித்துப்பெரும் பரிவெய்திடும் தாயே
நிசியிற்பசி நிலையில்அழும் தெருவில்பல நாயே
நிகழ்தல்படை நகர்வோஎனப் புலம்பும்பலர் வாயே

கண்கள்எதி ராகப்பலர் கணவர்தமைச் சுட்டார்
கதறித்துடி துடித்தேயவர் கடிதில்உயிர் விட்டார்
பெண்கள்நிலை கெட்டார்இடர் பட்டார்குடி கெட்டார்
பிறரின்றியும் தமரின்றியும் பெரிதுந்துயர் பட்டார்

அங்கம்மிக நொந்தேபலர் அரும்பாடுகள் பட்டு
அனலாய்க்கொதிக் கின்றவெயில் அதிலேதம்மைச் சுட்டு
கங்குல்பகல், பஞ்சம்பசி கருதாதுடல் கெட்டு
கைகால்களில் உளதும்விற்றுக் கடனும்பல பட்டு

மெய்யில்உறு வியர்வைவிழ விரும்பிப்பயிர் நட்டு
விளைவெய்திய போதில்அதை வீணேவிட்டு விட்டு
கையில்ஒன்றும் இலராகவே கடிதில்வெளிப் பட்டு
கதறித்துடி துடிப்பார்பலர் கண்ணீர்விட்டு விட்டு!

பாலைப்பழி செய்தார்இன்று பருகத்துளி இல்லார்
பருக்கைக்கழு கின்றார் முன்பு பசியேஎன்று சொல்லார்
சேலைத்துணி இல்லார்முன்பு தேரும்உடை வல்லார்
தெருவீதியில் உள்ளார்பொதுட் கயல்வீடுகள் செல்லார்

அல்லல்மிகப் படலால்இனி அகலும்நிசம் கண்ணீர்
அகமேமகிழ் வெய்தும்துயர் அகலாதென எண்ணீர்
அல்லல்மிகப் படுவார்தினம் ஆற்றாதழும் கண்ணீர்
அதுவேபெரும் படையாமெனும் குறள்வார்த்தையும்
எண்ணீர்!

- வ. சின்னப்பா
தனங்களப்பு

# மக்கள் வங்கி

# அறிமுகப்படுத்தும்

# ஜன ஜய

## 2 

## சேமிப்புக் கணக்கு

## உங்களுக்கென ஒரு வீடும் இன்னும் பல அதிவிசேட நன்மைகளும் !

மக்கள் வங்கி பெருமையுடன் அறிமுகஞ்செய்யும் 'ஜன ஜய 2000' சேமிப்புத் திட்டத்தில் இணைந்து, உங்கள் வளமான வாழ்வுக்கு வழிகோலுங்கள். கணக்கை ஆரம்பிக்க ஆகக்குறைந்தது ரூ. 2000/- இருந்தால் போதும்.

இந் நாட்டு வங்கித்துறையில் மற்றெவரும் வழங்காத அதிவிசேட நன்மைகளை நீங்கள் பெறுவீர்கள். வீடு கட்டுவதற்கும் வீட்டு உபகரணங்கள் வாங்குவதற்கும் கல்வி மற்றும் திருமணத் தேவைகளுக்கும் உங்களுக்கு வசதியான அடிப்படையில் கடன் வழங்கப்படும்.

| ஜன ஜய கண.மீதி | | பெறன்கூடிய கடன் | |
|---|---|---|---|
| ரூ. | 2,000 | ரூ. | 100,000 |
| ரூ. | 5,000 | ரூ. | 250,000 |
| ரூ. | 10,000 | ரூ. | 500,000 |
| ரூ. | 25,000 | ரூ. | 1,250,000 |
| ரூ. | 50,000 | ரூ. | 2,500,000 |
| ரூ. | 100,000 | ரூ. | 5,000,000 |

சிந்தியுங்கள். சரியான முடிவை எடுங்கள். ஜன ஜய 2000 சேமிப்புக் கணக்குடன் புதிய உலகில் பிரவேசியுங்கள் !

மிகச்சிறந்த 9% வட்டி

கணக்கிலுள்ள மீதியைப்போல 50 மடங்குவரை வீடமைப்புப் கடன்

ஆயுட் காப்புறுதித் திட்டம்

வெளிநாட்டுப் பயண திட்டம்

குத்தகை வசதி

இலக்ட்ரோனிக் பண வசதியை வழங்கும் ஸ்மாட் கார்ட் இலவசம்

கழிவுக் கட்டணத்தில் பீப்பிள்ஸ் வீசா கார்ட்

மேலதிக விபரங்களுக்கு இன்றே வங்கி முகாமையாளரைச் சந்தியுங்கள்

மக்கள் வங்கி 40 ஆண்டுகள்

மக்கள் மனமறிந்த வங்கி

**மக்கள் வங்கி**

PEOPLE'S BANK

# சமுர்த்தி எழுதுநர் நியமனத்துக்கான நேர்முகதேர்வுக்கு அழைக்கப்பட்டோர்

யாழ். மாவட்ட சமுர்த்தி எழுதுவினைஞர் பதவிக்கான நேர்முகத் தேர்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். செயலகத்தில் உள்ள யாழ். பிரதேச செயலர் அலுவலகத்தில் நடைபெறும் என்று ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கே. வி. குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்துள்ளார்.

நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளவர்கள் பிறப்புச் சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழ், கிராம சேவகரின் விதிவிடச் சான்றிதழ், கிராம சேவைகரின் நற்சான்றுப் பத்திரம், அடையாள அட்டை ஆகியவற்றுடன் சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

அழைக்கப்பட்டுள்ள 84 பேரின் பெயர் விவரம் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு.

### யாழ்ப்பாணம்

குலைசதாசன் ஜெனிற் கமிலஸ்— 143/3, ஸ்ரான்லி வீதி, சோமசுந்தரம் ஜெயகணேசன் — 210/12, காரைநகர் வீதி, கொட்டடி, ஒலிவெற் ஜெனிவா கணேஷன் — 24/2, றக்கா வீதி, சுண்டுக்குளி, சுபீலா துஷ்யந்தி மரியநாயகம் மொறிஸ் — 40ஏ, ராசேந்திரா வீதி, வரதராஜன் பிரதீபன் — 200, பிரதான வீதி, சுண்டுக்குளி, நொலஸ்கோ அன்னப்பிள்ளை — சென். மேரிஸ் வீதி, நாவாந்துறை, தனபாலசிங்கம் சசிதரன் — மீனாட்சி அம்மன் வீதி, கொட்டடி.

### நல்லூர்

கந்தசாமி சசிதரன் —புதிய செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, செல்வநாயகம் அருள்குமரன் — 136/4, பலாலி வீதி, திருநெல்வேலி, சோபனா ஸ்ரீதரன் —நாமகள் ஒழுங்கை, பொற்பதி வீதி, கொக்குவில், செல்லையா நிமலரூபன் — 117, பலாலி வீதி, திருநெல்வேலி, நியுராஜா சிவகுமார் — 3, தபால் சந்தோர் வீதி, கொக்குவில், காயத்திரி மகாலிங்கம் — 22, ஸ்ரேசன் வீதி, கொக்குவில் கிழக்கு, ஜீவலதா ஜெயக்குமார் — ஜி.பி. எஸ். வீதி, கல்வியங்காடு.

### வேலணை

நவரட்ணம் தேவதாஸ் — வேலணை கிழக்கு, நவரட்ணம் சாந்தரூபன் — 3 ஆம் வட்டாரம், நயினா தீவு, மலர்விழி ராஜரட்ணம் — 8 ஆம் வட்டாரம், மண்டைதீவு, முத்துலிங்கம் சுபாஷினி — 6 ஆம் வட்டாரம், நயினா தீவு, அமுதலிங்கம் அமுதினி — சரவணை கிழக்கு, கருணாகரன் பிரபாகரன் — வேலணை கிழக்கு, வராகினி கேதீஸ்வரன் 5 ஆம் வட்டாரம், வேலணை.

### ஊர்காவற்றுறை

அனந்தநாதன் அனந்தறூபி — ஊர்காவற்றுறை மேற்கு, நவரட்ணம் ராஜசிவம் — நடுத்தெரு, காரைநகர், சிதம்பரப்பிள்ளை கங்காதரன் — வேதரடைப்பு, காரைநகர், குணரட்ணம் ஜூடிசினா — சுருவில் வீதி, குழந்தைவேலு ஞானேஸ்வரன் — பருத்தியடைப்பு, ஏ. யூலியட் பெலிசியா — ஊர்காவற்றுறை கிழக்கு, ஞானசம்பந்தன் செந்தமிழ்ச் செல்வன் — புளியங்கூடல்.

### கோப்பாய்

தனபாலசிங்கம் வசந்தரூபன் — கோப்பாய் வடக்கு, சுப்பிரமணியம் சுகன்யா — மகாவித்தியாலய வீதி, அச்சுவேலி வடக்கு, சேனாதிராசா சுதர்சன் — நீர்வேலி வடக்கு, கந்தையா சுஜனி — கோப்பாய் தெற்கு, மகாதேவன் சுதர்சன் — நாவக்காடு, அச்சுவேலி, தர்மலிங்கம் தயாளினி — வளலாய்.

### சங்கானை

சிற்சபேசன் ஜெயதர்சினி — வட்டு. மேற்கு, ராமலிங்கம் அகிலன்—மூளாய் வீதி, வட்டு, மைசூர்நாதன் தர்மினி—டச்சு வீதி, சித்தன்கேணி, சிவநந்தன் நிரஞ்சன் —சங்கரத்தை, கந்தசாமி சிவகுமார் — பண்ணாகம் தெற்கு, வைரவநாதன் சுரேந்திரன் — அராலி தெற்கு, சபாரட்ணம் ஜெயப்பிரகாஷ் — அராலி மத்தி.

### சண்டிலிப்பாய்

பொன்னையா சிவகுமார்— அரசடி, கதுமலை கிழக்கு, அருள்பிரகாசம் அருன்வதன் — மாகியம்பிட்டி, விஜிதா கந்தசாமி— ஆனந்தா வீதி, மானிப்பாய், ராஜப்புலனிஸ்ரன் முகேஷ் — புலவர் வீதி, நவாலி வடக்கு, நல்லதம்பி தர்மினி — சண்டிலிப்பாய் வடக்கு, கருணாநிதி கவிதா—உடுவில் வீதி, மானிப்பாய், அன்ரனிப்பிள்ளை டெனி ஜெனிற்ரஸ் — பாத்திமா சேச் அருகில், பண்டத்தரிப்பு

### தெல்லிப்பழை

சிவநேசன் தர்சினி — கற்பகப்பிள்ளையார் கோவில், சுன்னாகம், தில்லையம்பலம் யசோதா — கும்பளாவளை, அளவெட்டி மத்தி, சின்னத்தம்பி தயாபரன் — மாதனை கிழக்கு, தெல்லிப்பழை, தில்லைவிநாயகம் சசிகுமார் — சங்குவேலி வடக்கு, மானிப்பாய், பாலசுப்பிரமணியம் பாஸ்கரன்—இணுவில் கிழக்கு தியாகராசா பிரபாகரன் — தமிழ் வித்தியாலய வீதி, மல்லாகம், தம்பிராஜா பிரதீபன் — வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

### உடுவில்

தர்மராஜா சுகிர்தராஜா— சங்குவேலி வடக்கு, மானிப்பாய், கனகரட்ணம் பவானி — ஏழாலை தெற்கு, கந்தசாமி கௌரி — உடுவில் கிழக்கு சுன்னாகம், கனகரட்ணம் விஜயலதா — ஏழாலை தெற்கு, காசிநாதர் கவிதா — கந்தரோடை, தம்பிராசா சுமதி — ஈவினை, மாசிலாமணி சிவகுமார் — சுன்னாகம் கிழக்கு.

### மருதங்கேணி

மாசிலாமணி வாசுகி — நாகர்கோயில் மேற்கு, சிவானந்தன் கோமகள்— அம்பன், குடத்தனை, அன்றியா குமுதினி — வத்திராயன் தெற்கு, தாளையடி, தங்கராசா வதனவேணி — செம்பியன்பற்று தெற்கு, நாகலிங்கம் துஷ்யந்தினி — செம்பியன்பற்று தெற்கு. கந்தசாமி சிவரூபினி — மருதரகேணி தெற்கு, சுப்பிங்மணியம்சதீஸ்வரன் — செம்பியன்பற்று தெற்கு.

### நெடுந்தீவு

கோபாலசிங்கம் புஷ்பலதா —2ஆம் வட்டாரம், பசுபதி கேதீஸ்வரன்— முதலாம் வட்டாரம், பரமேஸ்வரன் மோகனா—3ஆம் வட்டாரம், சதாசிவம் தவறஞ்சினி—5ஆம் வட்டாரம், அடைக்கலமுத்து லலிநிஷானி — 6ஆம் வட்டாரம், கிறிஸ்தோபர் கமலியல் தியாககுமார்—10ஆம்வட்டாரம், சிங்கராஜர் விமலராணி —10ஆம் வட்டாரம்

### சாவகச்சேரி

செல்வராசா ராஜேஸ்வரன் —நுணாவில் மத்தி, வேலாயுதபிள்ளை சிவகரன்—கண்டி வீதி, கொடிகாமம், நேசநாதன் பிரதீபன்—வேலம்போக்கடி, கொடிகாமம், ஆர். சிவசுதர்சினி — மீசாலை வடக்கு, மீசாலை, ஸ்ரீபன் ஜோட்ஸ் தர்சினி - கச்சாய் வீதி, சாவகச்சேரி, சிவகுரு அகிலதாஸ் — உசன், மிருசுவில், மார்கண்டு ஜெயமோகன்—மீசாலை வடக்கு, மீசாலை. (ஐ-க-3)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மருத்துவ பீடத்தின்
முதலாவது பீடாதிபதியாயிருந்த

**பேராசிரியர் ஏ. ஏ. ஹூவர்**
(A. A. Hoover)

அவர்கள் 05 — 07 — 2000 அன்று ஆஸ்திரேலியாவில் காலமானார். அவரின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பீடாதிபதி,
மருத்துவ பீட ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்.

(77386)

## கண்ணீர் அஞ்சலி

அருள்மிகு தோப்பு மாணிக்கப் பிள்ளையார்
கோயிலில் பண்ணிசை வகுப்பு நடத்திய
சங்கீத ஆசிரியை

**திருமதி கமலாதேவி தங்கராசா**

அவர்கள் 17-6-2000 அன்று வவுனியாவில் சிவபதம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எங்கள் அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தி அடைய விநாயகரை வேண்டுகின்றோம்.

தவமணிநடராசாவும்,
ஆலய பண்ணிசை மாணவர்களும்
நீராவியடி, யாழ்ப்பாணம். (77423)

## அனுமதி அட்டை யாழ். ஆஸ்பத்திரியில்

தாதியர் பயிற்சிக்கு ஆள்களைச் சேர்ப்பதற்காக எதிர்வரும் 20 ஆம் திகதி யாழ். வைத்தியசாலையில் இடம்பெறும் எழுத்துப் பரீட்சையில் தோற்றும் தென்மராட்சியைச் சேர்ந்த ஆறு பேரின் அனுமதி அட்டைகள் வைத்தியசாலை அலுவலகத்தில் உள்ளன. பின்வரும் ஆறுபேரும் தமது அனுமதி அட்டைகளை ஆஸ்பத்திரியில் பெற்றுக்கொள்ளலாம் என்று நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இ. ஸ்ரீதரன் — கைதடி தெற்கு, எஸ். மலைமகள் — கீரிமலை வீதி, மாவிட்டபுரம், வி. தங்கவேலு — எழுதுமட்டுவாள் தெற்கு, ஐ. பத்மாவதி — மீசாலை வடக்கு, எஸ். பரந்தாமன் — கச்சாய் தெற்கு, வி. ஜெகதீஸ்வரன் — காங்கேசன் துறை.

# மரண அறிவித்தல்கள்

## செல்லப்பா கணபதிப்பிள்ளை

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (17 - 08 - 2000) வியாழக்கிழமை ஏழாலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற புஷ்பம்மா அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தங்கவேலு மற்றும் ஆயிலியம், கமலாதேவி, விமலாதேவி (ஜேர்மனி), நித்தியானந்தம், நவமணிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியதேவி, தங்கராசா, நந்தகுமார் (மோட்டார் சைக்கிள் மெக்கானிக், அச்சுவேலி), லோகேஸ்வரன் (ஜேர்மனி), தங்கரத்தினம், சந்திரகுமார் ஆகியோரின் மாமனாரும் சிவாஜினி, சுதாஜினி, தயாழினி, சந்திரசேகர், காலஞ்சென்ற பகிரதன் மற்றும் சிவந்தினி, ஜீவராக் (லண்டன்), ஜெயராஜ், ஜெயந்தினி, கார்த்திக், பிரசன்னா, றொபின்சன், கஜலக்ஷ்மி, தக்ஷனி, சுஜானி (ஜேர்மனி), கபூர்ணன் (ஜேர்மனி), சுபானு, சஜானு, தேனுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(18-08-2000) வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக ஏழாலைஉசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. நந்தகுமார் (மெக்கானிக்)
(மருமகன்)
ஏழு கோயிலடி,
ஏழாலை மத்தி, ஏழாலை. (77427)

## செல்வன் துரைராசா ராஜ்குமார்

அல்வாய் பொன் முருகன் இல்லத்தைச் சேர்ந்த செல்வன் துரைராசா ராஜ்குமார் அவர்கள் 14-8-2000 அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்து துரைராசா (பொலீஸ் உத்தியோகத்தர் இல. 14291) இரத்தினகுமாரி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து அன்னப்பிள்ளை, நவரத்தினம் ஜானகியம்மா ஆகியோரின் அன்புப் பேரனும் தர்மராசா - பாலபரமேஸ்வரி, வரதராசா- தவமலர் (கனடா), வசந்தராசா காலஞ்சென்ற யோகராசா கிருஷ்ணா (இலங்கைவங்கி வவுனியா), லீலாதேவி ஆகியோரின் பெறாமகனும் திருமதி இ. சரஸ்வதியம்மா காலஞ்சென்ற த. இராசலிங்கம் (முன்னாள் பா. உ.) நவரத்தினராசா ரவிதரா ஆகியோரின் மருமகனும் தங்கராசா- அருந்ததியம்மா ஆகியோரின் பேரனும் ரவீந்திரராசா (கனடா), திருமதி பா. கவிதா, நிரஞ்சலா, அன்னராணி, நிவேதிகா, செந்தில்குமரன், செந்தில் ராஜன், செந்தில்வேல், ரகுபதி, ரஜீவ், சுஜீவ், ரமணன், அணித்தா, அர்ச்சனா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் பத்மலிங்கம், இந்திரலிங்கம், சிவாஜினி, இராசேந்திரலிங்கம், பார்த்திபன், துஷாந்த், யதுர்ஷா, பிரபாஜினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15 - 08 - 2000 செவ்வாய்க்கிழமையன்று இந்தியாவில் நடைபெற்றன.

தகவல்:
பொன்முருகன் இல்லம், ந. நவரத்தினராசா
மனோகரா, அல்வாய். (77395)

## திருமதி சாரதாம்பாள் கந்தையா

வேலணை கிழக்கு முதலாம் வட்டாரத்தை சேர்ந்த திருமதி சாரதாம்பாள் கந்தையா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமநாதபிள்ளை கந்தையா (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொட்டர் சபாபதிப்பிள்ளை—நாகபிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சோமநாதபிள்ளை —சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ரவீந்திரன் (ஆசிரியர், வைத்தீஸ்வரா வித்தியாலயம்), சத்தியபாமா (இந்தியா), ஆதவன் (இந்தியா), மேகலா (ஆசிரியை, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி ச. சிவகுமாரி (இந்தியா), திருமதி இ. மனோரஞ்சிதம் (ஆசிரியை, கொழும்பு), எஸ். ரமேஸ்குமார் (நியூட்டன் எலற்றிக்கல்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சாரங்கன் (இந்தியா), முதல்வன் (பல்கலைக்கழகம், அமெரிக்கா), ஜனாதன் (சில்வேர்ஸ் கொலிச், கண்டி), சங்கீதா (இராமநாதன் கல்லூரி, பம்பலப்பிட்டி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் காலஞ்சென்ற சபாரெத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற சண்முகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி ச. மகேஸ்வரி (ஆஸ்திரேலியா), திருமதி அன்னலெட்சுமி (பெரியபிள்ளை—கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும் சபாநந்தன் (கணக்காளர், ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற டாக்டர் சபாநாதன் (லண்டன்), காலஞ்சென்ற பொறியியலாளர் சபாலிங்கம் (பிரான்ஸ்), சபாநேசன் (பொறியியலாளர், லண்டன்), திருமதி ச. கௌரி (பிரான்ஸ்), திருமதி வானதி (பிரான்ஸ்), சுபாஈசன் (பொறியியலாளர், லண்டன்), திருமதி வ. சுமதி (பிரான்ஸ்), சபாநிரஞ்சன் (கணக்காளர், ஆஸ்திரேலியா), வாமதேவன் (உப-அதிபர்— கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்), ஸ்ரீவாசன் (பிரான்ஸ்), நளாயினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(18-8-2000) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10-00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக வேலணை சாட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
திருமதி மேகலா ரமேஸ்குமார்
(ஆசிரியை)
வேலணை கிழக்கு,
முதலாம்வட்டாரம், வேலணை. (77413)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

199/5, கில்னர்லேன், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் கணபதி சிறீகாந்தன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன கடந்த 05-08-2000 அன்று நல்லூர் ஆலயப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் தொடர்பு கொள்ளவும். (77382)

வண்ணார்பண்ணை, பெரியதம்பிரான் கோயில் வீதிக்கும் நல்லூரிக்கும இடையில நேற்று(17-08-00) வியாழக்கிழமையன்று பெண்களுக்கான தங்கக் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 73, பிறவுண் வீதியிலுள்ள டில்சாந்தி தையல் அகத்தில் ஒப்படைத்து உதவவும். (77392)

மருதங்கேணி தெற்கு, தாளையடி என்ற முகவரியிடப் பெற்ற கந்தப்பு நந்தகுமாரன் என்பவருடைய தேசிய அ.அ.(580840264v), விசேட அ.அ., தொழில் அ.அட்டை என்பன வராத்துப்பளைக்கும் கற்கோவளத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பிரதானவீதி, பருத்தித்துறையிலுள்ள அம்பாள் ஸ்ரோர்ஸில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (77400)

## SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலம் பயில தபால் மூலமும். ஆசிரியர்: ந. விக்னேஸ்வரன ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை. (77336)

## செங்கரும்பு

எம்மிடம் தரமான முற்றிய கரும்பு, நல்லினத் தென்னை, கமுகு நாற்றுகள் மற்றும் தென்னைப் பயன்களான உரிமட்டை, கால்மட்டை, கிடுகு, தென்னோலை ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: கரும்புத் தோட்டம், பேரம்பலம் மாஸ்ரர், தலையாளி, கொக்குவில் கிழக்கு. (77401)

## சோதிடம்

சாதகக்குறிப்பு பலன், திருமணப் பொருத்தம் பார்ப்பதற்கும் உள்ளூர், வெளியூர் சாதகக் குறிப்புக்கள் எழுதிக் கொள்ளவும் தொடர்பு: சிவா சோதிடர், 111, கோயில்வீதி, நல்லூர். (77355)

## பொய்யாமொழி ஜோதிடம்

தடைப்படும் திருமணம் விரைவில் நடைபெற, பிரயாணத் தடை விலக ஆலோசனை வழங்கப்படும். சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். சனி, செவ்வாய் ஸ்ரீவீரமகாகாளி அம்மன் கோயிலடியிலும், 140, பருத்தித்துறை வீதி, நல்லூரிலும். ஞாயிறு மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம். (77334)

## விற்பனைக்கு

திருவாசகம், தாயுமானவர் பாடல், நற்சிந்தனை, சிவயோக சுவாமிகள் வாழ்க்கையும்-வழிகாடலும், சிவதொண்டன் சபை வெளியீட்டு நூல்கள் இருக்கின்றன. தொடர்பு: 135, சிவன் கோவில் முன்பாக, நல்லூர், யாழ்ப்பாணம். (77374)

## பெற்றுக் கொள்ளவும்

வரணி இயற்றாலை எனும் முகவரியைக் கொண்ட கந்தசாமி தேவரணி என்பவரின் (இல.725113714v) தேசிய அ.அட்டையும், குறிப்பிட்ட தொகைப்பணமும் (16-08-2000) அன்று சங்கரப்பிள்ளை அன்சன் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குக் கிடைத்துள்ளது. உரியவர்கள் தகுந்த அத்தாட்சியுடன் வந்து மேற்கூறிய கடையில் பெற்றுக் கொள்ளவும். (77393)

## திருமலைக்கு புதிய அரச அதிபர்

திருகோணமலை,ஓக.18

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.டி.சந்திரதாச கொழும்புக்கு திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது இடத்திற்கு புத்தளம் பிரதேச செயலாளராகப் பணியாற்றிய நெலும்தெனிய பதவி உயர்வுடன் இடம் மாற்றப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாயன்று திருகோணமலை செயலகத்துக்கு வந்து இவர் தனது புதிய பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்டார். (ஐ-6)


NEW SCIENCE HALL
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
A/L 2000
* பொதுச் சாதாரண பரீட்சை விசேட வகுப்புக்கள் *
திரு. தவசேகர் B.Sc.
19-08-00, 21-08-00, 22-08-00 — 12.00-2.30 (S.L.T.)
(77411)


## இலவச கண் பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம்,ஓக.18

விழிவெண்படலத்தால் பாதிப்புற்றோருக்கான இலவச கண் பரிசோதனை முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இந்த முகாமில் யாழ்.போதனா வைத்தியசாலை கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.குகதாஸன் கண் பரிசோதனையை மேற்கொள்வார்.

இடம்பெயர்ந்து வாழும் நலிவுற்றோருக்கும், வலி.வடக்கில் வாழும் முதியோருக்கும் முன்னுரிமை அடிப்படையிலும் ஏனையோருக்கு வருகைதரும் ஒழுங்குமுறைப் படியும் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டியவர்களுக்கு போதனா வைத்திசாலையில் இம்மாதம் 22ஆம், 24ஆம், 26ஆம், திகதிகளில் அனுமதி பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதுடன் நலிவுற்றோருக்கு மட்டும் கண்ணாடி வில்லைகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

சுன்னாகம், இணுவில், மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகங்கள் இணைந்து இந்த முகாமினை நடத்த ஏற்பாடு செய்துள்ளன. (க)

## கஞ்சா கடத்திய சார்ஜன்ட் கைது

கொழும்பு,ஓக.18

உடவளவப் பகுதியிலிருந்து கொழும்பு நோக்கி வந்த பஸ் ஒன்றில் கஞ்சா கடத்தி வந்த இராணுவ சார்ஜன்ட் ஒருவர் எகலிய கொட பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை எகலிய கொட சோதனைச் சாவடியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் அந்த பஸ்வண்டியை நிறுத்தி சோதனை செய்த போதே இவர் கைது செய்யப்பட்டார். இந்நபரிடமிருந்து 30ஆயிரம் ரூபா பெறுமதியான 7 கிலோகிராம் கஞ்சா பொலீஸாரால் கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபர் அவிசாவளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது எதிர்வரும் 23ஆம் திகதி வரை சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கொக்குவில் நகரிற்கு பெருமை சேர்க்கும் வகையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட முதற் பெண் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட

பேராசிரியை

செல்வி வசந்தி அரசரட்ணம்

அவர்களை ... ழ்த்துகின்றோம்; பாராட்டுகின்றோம்.

'சொர்ணகிரி'
கே.கே.எஸ் றோட்,
கொக்குவில்.

மாமிமார்,
மச்சான்மார், மச்சாள்மார்.

(77379)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 1964 - 09 - 09



மறைவு 2000 - 05 - 21

**திருமதி இந்திரா கிருஸ்ணானந்தன்**

இல்லத்தின் தலைவியாய்!
இனிய வார்த்தைக்குக் குருவாய்!
எங்கள் மனதில் நீங்கா இடம் பிடித்த
எங்கள் அன்புத் தெய்வத்தை
எத்தனை ஆண்டுகள் கழிந்திடினும்
எம்மால் மறக்க முடியுமா?

இன்று (18-08-2000) வெள்ளிக்கிழமையன்று நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*பூவோடை,*
*கொற்றாவத்தை,*
*வல்வெட்டித்துறை.*

உங்கள் பிரிவால் துயருறும்,
**கணவன், பிள்ளைகள், குடும்பத்தினர்.**

(77367)

## வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின்
முதலாவது பெண் பீடாதிபதியாகப் பதவி ஏற்ற

**பேராசிரியை**

**செல்வி வசந்தி அரசரட்ணம்**

அவர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
அவரின் பணி சிறப்புற எங்கள் இனிய நல்வாழ்த்துக்கள்.

(C/12536) *அருளையா குடும்பத்தினர்.*

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி

சாவகச்சேரி - சங்கத்தானையைச் சேர்ந்தவரும், சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற அலுவலரும், இன்முகம் காட்டி, இனிதே பழகி, எம்மையெல்லாம் விட்டுச் சென்ற

**அமரர் இராசையா ஈஸ்வரதாசன்**

அவர்களுக்கு எமது அஞ்சலிகளைக் கண்ணீருடன் காணிக்கையாக்கி அவரது ஆத்மா சாந்தியடைய சர்வபல நாயகனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாவட்ட நீதிபதி,
மாவட்ட/நீதிவான் நீதிமன்ற
உத்தியோகத்தர், ஊழியர்கள்.

*மாவட்ட நீதிவான் நீதிமன்றம்,*
*சாவகச்சேரி.*

(77398)

## வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளின் விவரம் திரட்டல்

**வடக்கு- கிழக்கு மாகாணத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளின் விவரங்கள் வடக்கு-கிழக்கு மாகாண சபையினால் சேகரிக்கப்படுகிறது. இவ் விவரங்கள் கீழே காட்டப்பட்ட படிவத்திற்கமைவாகத் தயாரிக்கப்பட்டு பதிவுத் தபாலில் 2000-09-10 ஆம் திகதிக்கு முன்பதாக *'செயலாளர், மாகாண பொது நிர்வாக அமைச்சு, பிரடரிக் கோட்டை, திருகோணமலை'* என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.**

க. பரமலிங்கம்
செயலாளர்,
மாகாண பொது நிர்வாக,உள்ளூராட்சி,
கூட்டுறவு, வீதி அபிவிருத்தி,
தொழிற்றுறை அமைச்சு.

### வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வேலையற்ற பட்டதாரிகள் பற்றிய விவரங்களைச் சேகரித்துக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்

1. முழுப் பெயர்: ..........
2. தேசிய அடையாள அட்டை இல. ..........
3. i) நிரந்தர முகவரி: ..........
   ii) தற்போதைய முகவரி : ..........
   iii) தற்போதைய முகவரியிலுள்ள காலம்: ..........
   iv) தொலைபேசி இல. (இருப்பின்) : ..........
4. i) பிறந்த திகதி:.......... ii) பிறந்த இடம்: ..........
   iii) மாவட்டம்.......... iv) மாகாணம்: ..........
5. பட்டம் பெற்ற வருடம்:
   பட்டம் நடைமுறைக்கு வந்த திகதி:
6. சர்வகலாசாலையின் பெயர்:
7. பட்டத்தின் பெயர்:

| | கலை மாணி | விஞ்ஞான மாணி | வணிக மாணி | வர்த்தக முகாமைத்து மாணி | மருத்துவத் துறை சத்திர சிகிச்சை இளமாணி | பல்மருத்துவம்/ மிருக வைத்தியம் | விஞ்ஞான மாணி (பொறியியல்) | ஏனைய பட்டங்கள் (குறிப்பிடவும்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| பாடங்கள் | | | | | | | | |
| 1 | .... ........ | ............ | .......... | ......... | .................... | .................... | .................. | ............ |
| 2 | .... ........ | ............ | .......... | ......... | .................... | .................... | .................. | ............ |
| 3 | .... ........ | ............ | .......... | ......... | .................... | .................... | .................. | ............ |
| 4 | .... ........ | ............ | .......... | ......... | .................... | .................... | .................. | ............ |
| 5 | .... ........ | ............ | .......... | ......... | .................... | .................... | .................. | ............ |
| 6 | .... ........ | ............ | .......... | ......... | .................... | .................... | .................. | ............ |

8. பட்டப்பின் படிப்பு பற்றிய விவரங்கள் ஏதுமிருப்பின்:
9. குறிப்புகள்:


..........
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

(C/12538)

# திருமண நன்றித் திருப்பலி

அன்புடையீர்!

திருமதி பாக்கியமுத்து அன்னரஞ்சிதம்
அவர்களின் புதல்வன்
திருநிறை செல்வன்
**ஜெயவீரன்**



G.P பேர்மினஸ் – அஞ்சலா
தம்பதிகளின் புதல்வி
திருநிறை செல்வி
**ஜீன்மேரி**

இருவரையும் நாளை (19.08.2000) சனிக்கிழமை அன்று இறைவன் அருளோடு நோர்வேயில் நடைபெறும் திருமணத் திருப்பலியில் இல்லறத்தில் இணைத்துவைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அன்று காலை 10 மணிக்கு குருநகர், புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெறவுள்ள நன்றித் திருப்பலியில் கலந்து, செபித்து இந்த உபசரணையில் பங்கு கொண்டு சிறப்பிக்க தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*AMMERUD HELLINGA 39*
*0959 OSLO*
*Norway - 22162862*

**G.P. பேர்மினஸ் தம்பதிகள்**
11, சென்.ஜேம்ஸ் மேற்கு வீதி,
யாழ்ப்பாணம்.

(77399)



மக்கள் மனதில் தமக்கென ஒரு நீங்காத இடம்பிடித்த

# ❋ வீடியோ கலாமினி ❋

சிங்கப்பூரில் இருந்து கொண்டுவரப்பட்ட
புதியரக **மிக்சர்கள், கமராக்கள்** மூலம் சிறப்பான சேவையாற்றுகின்றோம்.

பூப்புனித நீராட்டு விழாவுக்கென விசேடமாக அமைக்கப்பட்ட

சுழல் தாமரை
சுழல் நட்சத்திரம்
சுழல் ராட்டினம்
மாடிப் படிச் செற்

அன்ன ஊஞ்சல்
ராஜ கதிரை
பலவர்ணக் குடைகள்
பிறை

★ பிரமாண்டமான செற் அமைத்து படப்பிடிப்புக்கு அழகு மிளிரச் செய்து வருகின்றோம்.
★ மின்விசிறிகள், பிளாஸ்ரிக் கதிரைகள் கொண்ட இயற்கை எழில்மிகு காட்சிகள் அமைந்த சொக்கட்டான் மணப்பந்தல் அமைத்திடவும்
★ பலவர்ண ஆடைகள் மாற்றிப் படம் பிடிப்பதற்கு எமது ஸ்தாபனத்தில் பூங்கா வசதியும் செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் திருப்தியே எங்கள் சேவை!

# வீடியோ கலாமினி

T.P: 070 - 212431
அச்சுவேலி
(C/12539)



உ
முருகா

# நல்லூர்க் கந்தனின் வருடாந்த உற்சவம் 2000



மரகத மயின்மேல் வருமுருகா அரகர சிவசிவ ஆறுமுகாவா
சரவண பவனே சண்முகனே
வரந்தர வாவா என்முன்னே அரவணி சிவனா ரருள் பாலா
பரவ வரமருள் பரமதயாளா
*(சிவயோக சுவாமிகள்)*

அன்புடையீர் !

யாழ். நகரில் புகழ்பூத்த நல்லூர்க் கந்தனின் வருடாந்த உற்சவம் (05.08.2000) சனிக்கிழமை ஆரம்பமாகிவிட்டது. கடந்த காலங்களைப் போல் இம்முறையும் மேற்படி ஆலயத்தின் மேற்கு வீதியில் அமைந்துள்ள மூத்ததம்பி மடத்தில் முருகன் அருள் வேண்டி வரும் அடியார்களுக்கு இன்று (18.08.2000) வெள்ளிக்கிழமை தொடக்கம் அன்னதானம் தொடர்ந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்னதானம் வழங்க விரும்புவோர் தங்களால் இயன்ற பொருள்களை தந்துதவலாம்.
சகல அடியார்களும் இந்த அன்னதானத்தில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தங்கள் பேருதவிக்கு நல்லைக் கந்தன் தங்களுக்கு எல்லாவித நலன்களும் அருள்வானாக!

139, கோயில் வீதி,
நல்லூர்.

**செ.சோமஸ்கந்தன்**

(77390)


# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 17ஆம் திகதிவரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

| | |
|---|---|
| 513/146400/A | 513/146400/B |
| 513/150573/A | 513/150573/B |
| 513/150669/A | 513/150669/B |
| 513/150669/C | 513/150682/A |
| 513/150762/A | 513/150762/B |
| 513/150762/C | 513/151914/A |
| 513/151914/B | 513/151983/A |
| 513/151983/B | 513/151983/C |
| 513/151991/A | 513/151991/B |
| 513/151991/C | 513/151991/D |
| 513/151991/E | 513/152076/A |
| 513/152076/B | 513/152076/C |
| 513/152080/A | 513/152086/A |
| 513/152099/A | 513/152099/B |
| 513/152143/A | 513/152161/A |
| 513/152161/B | 513/152161/C |
| 513/152182/A | 513/153276/A |
| 513/155100/A | 513/155100/B |
| 513/155125/A | 513/155171/A |
| 513/155172/A | 513/155222/A |
| 513/155240/A | 513/155294/A |
| 513/157777/A | 513/157777/B |
| 513/157780/A | 513/157781/A |

**யாழ்ப்பாணம்**

| | |
|---|---|
| 512/137180/A | 512/137180/B |
| 512/137180/C | 512/144274/A |
| 512/144274/B | 512/144349/A |
| 512/144349/B | 512/144349/C |
| 512/147938/A | 512/147938/B |
| 512/147938/C | 512/149819/A |
| 512/149819/B | 512/149819/C |
| 512/149819/D | 512/149822/A |
| 512/149901/A | 512/149969/A |
| 512/152353/A | 512/152353/B |
| 512/152353/C | 512/152361/A |
| 512/152361/B | 512/152377/A |
| 512/152377/B | 512/152448/A |
| 512/152496/A | 512/152582/A |
| 512/152582/B | 512/152582/C |
| 512/154014/A | 512/154014/B |
| 512/154018/A | 512/154018/B |
| 512/154018/C | 512/154085/A |
| 512/154085/B | 512/154085/C |
| 512/154085/D | 512/154093/A |
| 512/154093/B | 512/154093/C |
| 512/154093/D | 512/154112/A |
| 512/154112/B | 512/154112/C |
| 512/154112/D | 512/154216/A |
| 512/154216/B | 512/154276/A |
| 512/154276/B | 512/154276/C |
| 512/154278/A | 512/156304/A |
| 512/156304/B | 512/156382/A |
| 512/156399/A | 512/156400/A |
| 512/156402/A | 512/156402/B |
| 512/156437/A | 512/156442/A |
| 512/156442/B | 512/156480/A |
| 512/156493/A | 512/156509/A |
| 512/156509/B | |

**கோப்பாய்**

| | |
|---|---|
| 511/133945/A | 511/133945/B |
| 511/149640/A | 511/157658/A |

**நல்லூர்**

| | |
|---|---|
| 512/144644/A | 512/144644/B |
| 512/144807/A | 512/144807/B |
| 512/149840/A | 512/149923/A |
| 512/149923/B | 512/149923/C |
| 512/149961/A | 512/150238/A |
| 512/150290/A | 512/152364/A |
| 512/152364/B | 512/152364/C |
| 512/152437/A | 512/152457/A |
| 512/152457/B | 512/152457/C |
| 512/152874/A | 512/152874/B |
| 512/152928/A | 512/152928/B |
| 512/152928/C | 512/154017/A |
| 512/154017/B | 512/154017/C |
| 512/154020/A | 512/154020/B |
| 512/154077/A | 512/154123/A |
| 512/154123/B | 512/154167/A |
| 512/154167/B | 512/154167/C |
| 512/154167/D | 512/154167/E |
| 512/154205/A | 512/154213/A |
| 512/154213/B | 512/154213/C |
| 512/154219/A | 512/156243/A |
| 512/156243/B | 512/156246/A |
| 512/156246/B | 512/156246/C |
| 512/156307/A | 512/156320/A |
| 512/156387/A | 512/156415/A |
| 512/156422/A | 512/156467/A |
| 513/150374/A | 513/150752/A |
| 513/150752/B | 513/150752/C |
| 513/150752/D | 513/151764/A |
| 513/151764/B | 513/152164/A |
| 513/152209/A | 513/152210/A |
| 513/152210/B | 513/155108/A |
| 513/155126/A | 513/155141/A |
| 513/155141/B | 513/155206/A |
| 513/155255/A | 513/155355/B |

**சண்டிலிப்பாய்**

| | |
|---|---|
| 513/148295/A | 513/148295/B |
| 513/148296/A | 513/148296/B |
| 513/148296/C | 513/148296/D |
| 513/148297/A | 513/148298/A |
| 513/148298/B | 513/151813/A |
| 513/151860/A | 513/151861/A |
| 513/151861/B | 513/151861/C |
| 513/151861/D | 513/151861/E |
| 513/151936/A | 513/152068/A |
| 513/152068/B | 513/152180/A |
| 513/152194/A | 513/153250/A |
| 513/153250/B | 513/155122/A |
| 513/155123/A | 513/155143/A |
| 513/155155/A | 513/155277/A |
| 513/155278/A | 513/155278/B |
| 513/155283/A | 513/155289/A |
| 513/155310/A | 513/155311/A |
| 513/155319/A | 513/155320/A |
| 513/155357/A | 513/155357/B |
| 513/155357/C | 513/155473/A |
| 513/155473/B | 513/157713/A |
| 513/157713/B | |

**தெல்லிப்பழை**

| | |
|---|---|
| 513/138242/A | 513/151910/A |
| 513/151911/A | 513/155129/A |
| 513/155129/B | 513/155129/C |
| 513/155220/A | 513/155258/A |
| 513/155258/B | |

**உடுவில்**

| | |
|---|---|
| 513/143783/A | 513/143783/B |
| 513/143783/C | 513/143783/D |
| 513/144099/A | 513/144099/B |
| 513/144099/C | 513/144209/A |
| 513/150578/A | 513/150728/A |
| 513/151853/A | 513/151878/A |
| 513/151878/B | 513/151878/C |
| 513/151878/D | 513/151878/E |
| 513/152093/A | 513/152189/A |
| 513/152189/B | 513/152189/C |
| 513/152189/D | 513/152204/A |
| 513/152231/A | 513/152231/B |
| 513/152238/A | 513/153236/A |
| 513/155194/A | 513/155203/A |
| 513/155203/B | 513/155210/A |
| 513/155210/B | 513/155210/C |
| 513/155210/D | 513/155231/A |
| 513/155413/A | 513/155413/B |
| 513/155413/C | 513/155451/A |
| 513/155451/B | 513/157712/A |
| 513/157712/B | |

## சட்டமூலங்கள் நிறைவேற்றம்

நிதி ஒதுக்கீட்டுத் திருத்தச் சட்டமூலம், இலங்கை வங்கி திருத்தச் சட்டமூலம், குத்தகைச் சட்மூலம், தொகை மதிப்பீட்டுச் சட்டமூலம் என்பன நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டன.(ஐ-7)

### அநுராதபுரம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து எதிர்வரும் செவ்வாய் கப்பல் மூலம் அவர்கள் யாழ். சிறைச்சாலைக்கு அனுப்பப்படுவர்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வவுனியாக் கிளை இணைப்பதிகாரி எஸ்.சிறீதரன் நேற்று அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற சமயம் இந்த விடயம் அவரிடம் தெரிவிக்கப்பட்டது.

அனுப்பப்படவுள்ளோரின் விவரமும், அவர்களது சிறைச்சாலை இலக்கமும் வருமாறு:-

எஸ்.தர்மலிங்கம்(1749), எஸ்.ஏ.ராஜ்குமார்(258), செல்வராஜ்(42), எஸ்.அழகேசன்(180), ஜே. இருதராஜ்(181), எஸ்.திருவேந்திரன்(182), கே.கமலராஜ்(120), ஆர். கமலேந்திரன்(172), வி.ஜெயக்குமார்(4431). பி.குகநாதன்(166), ரி.மைக்கல் அன்ரன்(128),ஜே.மாடசாமி(129), ஜே.ஏ. கிருஷ்ணன்(130), எஸ்.நிக்கலண்ட் (131),தவசி தவறூபன்(254),அன்ரன் அமலதாஸ்(231),ஏ.பி. ஸ்ரனிஸ்லாஸ்(31), ஏ.ஆனந்தகுமார்(232), கிருஷ்ணர் விஜயகுமார் (5891).

## அரசு-புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தம் முறிவடைந்த வேளையிலேயே இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நோர்வே அரசு துணை வர வேண்டும் என்று ஹமீத் கேட்டுக் கொண்டார்.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான நோர்வே அரசாங்கத்தின் பங்களிப்பு நீண்ட கால வரலாற்றைக் கொண்டது. இலங்கை மக்கள் இதை அறிந்திருக்க வேண்டும். எந்த ஒரு நாடும் அபிவிருத்தி அடைவதற்கு அங்கு சமாதானம் ஒரு முக்கியகாரணியாக அமையும்.

அண்மைக்காலத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க உதவ எமது நாடு முன்வந்தது. இந்த் முயற்சியில் எதுவித பலனையும் எதிர்பார்த்து நாம் ஈடுபடவில்லை. இடையில் கைவிடாமல் எமது' முயற்சியை தொடர்வோம் - என்றார்.

**ரணில் உரை**

ஹமீத் நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

ஏ.சி.எஸ். ஹமீத் அவர்கள் மரணமடைவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் சந்தித்தார். இலங்கை திரும்பியவுடன் இந்தச் சந்திப்புக் குறித்து என்னிடமே விவரமாகக் கூறியிருந்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் அரசியல் பலம் இருந்ததாலேயே ஹமீத்துக்கு அன்ரன் பாலசிங்கத்துடன் பேச முடிந்தது - என்றார்.

இந்த நிகழ்வில் ஐ.தே.கட்சியின் தவிசாளர் கரு ஜெயசூரியா, அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், எம்.எச்.எம். அஷ்ரப், சபாநாயகர் கே.பி.ரத்நாயக்கா உட்பட முக்கிய அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.(அ-3-9)


கலைமகள் குறுநாவல் போட்டியில்
"மீண்டும் ஒரு சீதைக்கு"
முதல் பரிசு பெற்ற கலாநிதியை வாழ்த்துகின்றோம்

எந்தத் துறையிற் புகுந்தாலும்
அந்தத் துறையில் தடம் பதிப்பாய்
எங்கெலாம் தமிழர் வாழ்வாரோ
அங்கெலாம் உன் புகழ் நிலைத்திருக்கும்
எங்கள் கலாநிதி குணராசா
இலக்கியக் கலைமகள் விருதினையும்
வென்றாய்! செங்கை ஆழியனே
வெற்றிகள் தொடர வாழ்த்துகிறோம்

யாழ்.மாவட்ட கிராம அலுவலர்
நலன்புரிச் சங்கம்
பதிவு இல.J/89/4376

உரும்பிராய். (77429)



COMPUTER கல்வி பயில
உள்ளீர்களா?

உங்கள் கணனி நிறுவனத்தை
நீங்கள் தெரிவு செய்துவிட்டீர்களா?
நீங்கள் தெரிவுசெய்த கணனி நிறுவனம் அரசினால்
அங்கீகரிக்கப்பட்டதா?
பாடவிதானம் அங்கீகரிக்கப்பட்டதா?

இலங்கையில்

- ✓ இலங்கை அரசின் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சினால் NEICT அங்கீகரிக்கப்பட்டது.
- ✓ இலங்கை அரசின் NATTAவினால் நடத்தப்படும் Com - puter Driving Licenceக்கு வடக்கு – கிழக்கில் சிபார்சு செய்யப்பட்ட ஒரே நிறுவனம்.
- ✓ இலங்கை அரசின் தொழில் மற்றும் மூன்றாம் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது.
- ✓ இலங்கை கணனிகள் பயிற்சி நிலையக் கூட்டமைப்பின் குழு உறுப்பினர்.

சர்வதேசம்

- இங்கிலாந்தின் கணனி சார் தொழில் கூட்டமைப்பின் உறுப்பான்மை
- ஆஸ்திரேலிய மற்றும் இங்கிலாந்து கணனிகள் சபையின் பரீட்சைக்கு மாணவர்களை தோற்றுவித்தல், உயர்ந்த சித்தி வீதம்.

மற்றும் யாழ்.நகரில்

★ வடக்கு – கிழக்கு மாகாண அரச ஊழியருக்கான கணனி பயிற்சி நிறுவனமாக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட சிறப்புத் தகுதிகளை உடைய
எமது நிறுவனம்
கணனி பயிற்சிக்கு!
அங்கீகரிக்கப்பட்டதா?
அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தை நீங்களே
தெரிவு செய்து கொள்ளுங்கள்.
On the Right Track

DCS - FOR THE NEXT GENERATION
INFORMATION TECHNOLOGY NEEDS.

DCS
COLLEGE OF COMPUTER TECHNOLOGY
(British ACP Recognized
Training Centre)
(Reg. No. N(PVS) 13073)

T.P.No: 021-2596
E-mail: dcsjaf@sltnet.lk
P.O.Box: 144 - Jaffna.

124/2, Palaly Road,
Thirunelvely,
Jaffna.

(C/12539)


### பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்கு முன்னர் இந்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றி புதிய முறையின் கீழ் தேர்தலை நடத்த அரசு முயற்சி எடுத்து வருகிறது.

இதனை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் தேவைப்படுவதால் ஐ.தே.கவின் ஒத்துழைப்பின்றி இதனை நிறைவேற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. (இ-6)

### மேலும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மற்றைய எலும்புக்கூடும் பொது மக்களால் மீட்கப்பட்டன.

இந்த எலும்புக்கூட்டின் கைகள் நைலோன் கயிற்றினால் சுற்றிக் கட்டப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. (இ-9)

### விசாரணை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து நேற்றுத் திரும்பவிருந்தார். அவர் இன்று வேலைக்கு வருவார். அவருடன் ஆலோசனை நடத்தி விசாரணைகளை ஆரம்பிக்கவிருக்கின்றோம்" - என்று அவர் கூறினார்.

### யாழ்.நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'ஜனஜய' சேமிப்புத் திட்டமும் 'ஜய சிறி' பரிசுத் திட்டமும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன என்றும் -

இவை தொடர்பான தகவல்களை பத்திரிகைவிளம்பரங்களிலும் அண்மையிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளிலும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் - மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய உதவி முகாமையாளர் கிங்ஸ்லி இராஜநாயகம் தெரிவித்துள்ளார். (ஐ)


அதிரடி அரங்கு
இடமின்மை காரணமாக அதிரடி அரங்கு இன்று வெளிவரவில்லை. ஞாயிறு வெளிவரும்.


### இலியாஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு எழுதிய கடிதத்தில் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

இது விடயமாக அவர்களது பதிலை எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன் அறிவிக்குமாறு அக்கடிதத்தில் அஷ்ரப் கேட்டுள்ளார்.

### கடும் போட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

16 வாக்குகளும், மைத்திரிபால சிறிசேனவுக்கு 12 வாக்குகளும் கிடைத்தன.

கட்சியின் தலைவியாக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தொடர்ந்தும் பணியாற்ற வேண்டும் என்று ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் உபதலைவர்களாகவும், அமைச்சர் மஹிந்த விஜயசேகர, பிரதி அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால, நாடாளுமன்ற உறுப்பினர் விஜயமுனி சொய்ஸா ஆகியோர் பிரதிச் செயலாளர்களாகவும் - தெரிவுசெய்யப்பட்டனர். (இ-3-4)


A/L 2000
பொது சாதாரண
பரீட்சை
விசேட வகுப்புக்கள்

த.தவசேகா (B.Sc.)
சனி 19.08.2k
திங்கள் 21.08.2k
செவ்வாய் 22.08.2k
9.30-12.00 (S.L.T)

★ அச்சடிக்கப்பட்ட குறிப்புகள் வழங்கப்படும்.
★ சகல துறை மாணவர்களும் பங்குபற்றலாம்.

D.M.I
யாழ்நகர்.
(77414)



NCCA
வகுப்புக்கள்

அரச அங்கீகாரம் பெற்ற NCCA – 2000 பரீட்சைக்கான இறுதிப்பிரிவொன்று அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 14.08.2000 அன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரை தம்மைப் பதிவு செய்து கொள்ளாத மாணவர்கள் உடனடியாகத் தம்மை பதிவு செய்து விரிவுரைகளில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகிறீர்கள்.

இயக்குநர்
IIS
யாழ்ப்பாணம்.
(C/12546)






A/L பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கான
எங்களது திட்டங்கள்

விசேட சலுகை
ஒரு மாதகால இலவச பயிற்சி நெறிகள்
In Information Technology
Programming Fundamentals
ஆரம்பம் 27-08-2000 & 30-08-2000
முடிவில் பரீட்சை

புலமைப் பரிசில் திட்டம்
பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில்
புலமைப் பரிசில்கள்

பயிற்சி நெறிகள்
Diploma in Business Computer Applications
Diploma in Scientific Computer Applications
Diploma in MS Office

STP - Super Technical Programme with a natural touch
54A,Palaly Road, Kantharmadam



முக்கிய அறிவித்தல்

பட்டம் பெற்று தற்போதுவரை பட்டதாரிப் பயிலுநர்களாக நியமனம் வழங்கப்படாத பயிலுநர் (தகுதிகாண்) ஆசிரியர்கள் அனைவரையும் இன்று வெள்ளிக்கிழமை (18.08.2000) காலை 9.00 மணிக்கு யாழ். செயலக முன்றலில் உள்ள துவிச்சக்கரவண்டி நிலையத்துக்கு தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்
க.தயாபரன்
(தலைவர்)

பட்டதாரிகளான பயிலுநர்
(தகுதிகாண்) ஆசிரியர் சங்கம்
(77404)



மரண அறிவித்தல்

பண்டிதர் வ.நடராசா

(இளைப்பாறிய ஆசிரியர் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்)

குரும்பசிட்டியை நிரந்தர வசிப்பிடமாகவும் சுதுமலையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பண்டிதர் வ.நடராசா அவர்கள் நேற்று (17.08.2000) வியாழக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் நாவற்குழியைச் சேர்ந்த வல்லிபுரம் - மாணிக்கம் ஆகியோரின் கனிஷ்ட புதல்வனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் சக்திதாசன்(ஜெயபுரம் - வன்னி), காளிதாசன் (ஆசிரியர், மகாஜனக் கல்லூரி) சண்முகதாஸன்(இலங்கை வங்கி, புத்தளம்), யோகதாஸன் (V.S.B குறூப், யாழ்ப்பாணம்.), Dr. தனலட்சுமி(லண்டன்), ஜெயலட்சுமி, நித்தியலட்சுமி, சுகிர்தலட்சுமி (கொலன்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவிகாராணி, தனலட்சுமி, நந்தினி, நாகேஸ்வரி, Dr.சண்முகதாஸன்(லண்டன்), சண்முகராஜா(சீமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை) கோபாலமூர்த்தி (ஆசிரியர் கோண்டாவில் C.C.P.M.S பாடசாலை), லவன் (கொலன்ட்) ஆகியோரின் மாமனாரும் அஜித் (மொரட்டுவ பல்கலைக்கழகம்), கஜன்(லண்டன்), தேவகாந்தன், சோபா, பிரசாந், புகழினி (யாழ்.இந்துமகளிர் கல்லூரி), அருண்(பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்), தினேஸ்(லண்டன்), சாதனா(யாழ்.இந்துமகளிர் கல்லூரி), றொகான்(யாழ்.இந்துக் கல்லூரி) ரஜீவ்(யாழ்.இந்துக் கல்லூரி), வினோத், சௌமியா(கொலன்ட்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2000) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சுதுமலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்குத் தகனத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'யமுனா'
சுதுமலை மேற்கு,
மானிப்பாய்.

தகவல்:
யோகதாஸன்
(மகன்).
(C/12530)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18-08-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.